உ

சிவமயம்.

---

# EXPERIENCES OF A TOUR.

---

## தேச யாத்திரை

அல்லது

# பிரயாண அனுபவம்.

---

நாட்டுக்கோட்டை நகரவைசியர்களெனும்
நமது குலதிலகமணிகள் பற்பல ஜாதியினரை யொப்பப்
பலவிதத்தும் முன்னேற்றமடைவதையே
லட்சியமாகக்கொண்ட, சில ஜாதியபிமானிகள்,
பர்மாவில் நகரவைசியர் வசித்து வரும் இடங்களுக்குப்
பலமாதங்களாகச் செய்த பிரயாணத்தின்
அனுபவங்களைத் தொகுத்து செக்ரெட்டெரி B. N. C. A.

**பழனியப்பா அவர்களால்**

இயற்றப்பட்டு,

**நாட்டுக்கோட்டை செட்டியார் சங்கத்தால்**

வெளியிடப் பெற்றது.

---

இரங்கூன்
கிருஷ்ண எலக்ட்ரிக் அச்சேந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

---

**1920.**

உ

சிவமயம்.

ஒற்றுமையை உண்டாக்கும் ஓங்கார வடிவமே நம:

# முகவுரை.

முற்காலமுதலே உலகமெங்கணும் பெருமை பெற்ற இந்தியாவில் தென் இந்தியா வென்ற சென்னை இராஜ தானியாம் தமிழ் நன்னாடாகிய பாண்டிய நாட்டை தலை நகராய் கொண்டு வசித்து வரும் இரத்னதன மகுட வைசியரென்ற நாம் சுமார் 32-கோடி ஜனங்களுள்ள பல வளங்களும் நிறைந்த இந்தியா தேசத்தில் ஒவ்வொரு வகுப்பினரும் முன்னேற்ற மடைவதற்கான வேலைகளை பரபரப்புடன் செய்து இராஜீய விஷயத்திலும் பங்கு பெற்று வர நாம் ஒன்றிலும் சேராதவர்கள் போலிருந்துவரினும் கொடிய யுத்தத்தால் ஏற்பட்ட காலமாறுத லெனும் சக்கரச்சுழற்சி விரைவில் வெளி வரும்படி செய்ததைக் கொண்டும் நம்மில் சுமார் ஆறில் ஓர் பாகத்தினராகிய எம் உரிமை சோதரர்கள் பலவித காரணங்களால் பெண் அகப் படாது பரிதபித்து வருவதை உத்தேசித்தும் அனேகர் தம் உரிமைக் காதலிகளை பிரிந்து மூன்று வருடங்களுக்கு மேலும் இப்பர்மா தேயம் போலுள்ள பலவிடங்களில் வசித்து வருவ தால் சந்ததிக்குறைவு நேரிடுகிறதை நம்மவர் கவனிக்க வில்லையே என எண்ணியும் நாம் முற்கால மிருந்த உன்னத நிலையை அறிந்து திருத்திக் கொள்ளுதல் அத்தியாவசிய மெனக் கருதி பொதுவாக தேயம் சமயம் பாஷையையும் முக்கியமாகச் சுய ஜாதியாரின் முன்னேற்றத்தையும் அஸ்திவாரமாய்க் கொண்டு சில வருடங்களாய் பத்திரிகைகளாகிய உரிய நேயர்களுடன் பழகி வந்த நற்பழக்கத்தால் "நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை" என்ற மேலார் வாக்குப்படி முதன்மையாக பொதுஜன சேவையாகிய தேச ஊழியஞ் செய்வதே பெரும் புண்ணியமெனவும் இச்சென்மத்தாலாய பயனெனவும் எண்ணி உண்மையோடு உழைக்க வெளி வந்தனம். "குற்றம் களைந்து குணம் கொண்டு ஆராய்தல் கற்றறிந்த மாந்தர்கடன்" என்ற

படி ஆண்டிலும் அறிவிலும் அனுபவத்திலும் ஆற்றலிலும் சிறியேனாகிய என்னால் வெளியிடப்பட்டுள்ள "தேச யாத்திரை அல்லது பிரயாண அனுபவம்" என்னும் இச்சிறுநூலில் தவறி ஏற்பட்டுள்ள குற்றத்தை மன்னித்து சிறிது குணமிருப்பதை எம் அரிய பெரியதாயாகும் பாரதமாதாவின் சீர்பாத கமலங்களாகிய பாதபங்கயத்தில் சமர்ப்பித்து ஒவ்வொருவரும் அன்பை புஷ்பமாய்க்கொண்டு அருச்சித்து எம் கூட்டத்தாருக்கே தேசத் தொண்டு செய்ய ஊக்கத்தை மென்மேலும் உண்டாக்கவேணுமெனக் கேட்டுக்கொள்ளும்படி தாழ்வுடன் தெரிவித்துக் கொள்ளும்,

தாசானுதாசனாகிய பொதுஜன ஊழியன்.

எமேதீன், 11-10-20.

பழனியப்பா
செக்ரட்டெரி B.N.C.A.

உ

சிவமயம்.

# தேச யாத்திரை

அல்லது

# பிரயாண அனுபவம்.

"அகரமுதலெழுத்தெல்லாம்
ஆதிபகவன் முதற்றே யுலகு"
"எப்பொருள் யாரார் வாய்க்கேட்பினு
மப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு."

## மங்கலப்பொலிவுறும் மதுரை மாநகர்.

சீருயர் பெற்ற செல்வர்காள்,

கருணையங்கடலாகிய வள்ளல் சோமசுந்தரக் கடவுளே அரசர்க்கரசராயிருந்து அரசாட்சி செய்ததும். உக்கிரமப்பெரு வழுதியை மகனைப் பெற்றெடுத்ததும் மற்றபலவளங்களும் நிறைந்ததோடு தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்க மென்ற முத்தமிழ் சங்கங்கள் அனேகாயிர வருடங்களுக்கு முன்னே நடாத்தப்பட்டு வந்ததும் அறிதற்கரிதாகிய திருவிளை யாடல்கள் அனேகம் நடந்ததும், ஹிந்து சமயமெனும் அதி மேன்மை தங்கிய சமயத்தை விர்த்தி செய்ததும் கடம்பவன மெனும் கூடல் நகரமேயாகும்.

## மறைந்த சங்கத்தை மகிழ்பெற அமைத்தல்.

பாண்டிய வம்சபரம்பரை நீங்கியபின் இடையில் ஏற்பட்ட கவனக்குறைவால் தாய் பாஷையாகிய தமிழ் ஆதரிப்பாரில்லாது மறைந்து போகுந் தருவாயிலிருந்தது அதை பாண்டிய வம்சத்த வரே இவர்தானேயென எண்ணக்கூடிய ஸ்ரீமாந் பொன்னுச்சா மித் தேவரின் அருந்தவப்புதல்வர் பாண்டித்துரை எனும் **பால வனம்** ஜமீன்தார் செல்வ குலசீலசம்பன்னர் அறிந்து மதுரையி லேயே தமிழ்ச்சங்கத்தை நிறுவி பலர்களும் பின்பற்றும்படியான மார்க்கத்தைச் செய்தனர். 10-15 வருடங்களின் பிறகே தமிழ் விருட்சத்தின் பயன் பலவிடங்களுக்கும் தெரியச்செய்யும் என அவர்வெளியிட்டவாறு தாய்பபாஷையாகும்(மரம்)விருட்சத்தின் புஷ்ப மணம் அனேக விடங்களில் வீசிவருவதோடு நம் வைசிய

நம் நாட்டிற்குவந்து பொருள் அபகரித்துக்கொண்டு போகும் புருஷ, பெண் பாகவதக் கோஷ்டிகளைப்பற்றியும் நம் நாட்டுக்கு இனி ஏற்படும் ரெயில்வேயின் பிரயோஜனத்தைப் பற்றியும் தற்காலத்துக்கு ஏற்ற தர்மங்களில் நம்மவர்கள் பொருள் செல விடவேண்டிய அவசியத்தைப் பற்றியும் மனதில் ஏற்படும் எண்ணங்களை அந்தந்த சமயங்களில் பத்திரிக்கையில் வெளி யிட்டதோடு காண்பவர்களிடம் இதையே பேசியும் வருவேன். பாரதமாதாவின் செல்வப்புதல்வியாகும் மிஸஸ். அனிபெஸண்டு அம்மையை உதகமண்டலத்தில் மதுராஸ் கவுர்ன்மெண்டார் நிபந்தனையில் வைத்திருந்த சமயம் சிலபத்திரிகைகளில் அம்மை யாரின் விடா ஊக்கமாகிய தேச சேவையைக் கண்டதின் பயனாக எம்மால் முடிந்த உதவியாகிய சிறுதுகைகளை குறிப் பிட்ட கனவான்களிடம் மிகச் சந்தோஷத்தோடு பெற்று பிங்கள௵ ஆவணிமீ ௰௯௨ பிரயாணமாகி வருங்கால் திருப் பாதிரிப்புலியூரை அடுத்த திருவனந்தபுரம் தேவநாதப்பெரு மானைத் தரிசித்து தாயார் சன்னதியில் சேவை செய்து கொண்டிருக்கும் சமயம் ஓர் பிராம்மண ஆண் குழந்தை யால் தாயே காப்பாற்று என்று எழுந்த அசரீரியாகும் ஆப்த வாக்கியத்தையும் பெற்று தேசத் தொண்டுக்காக உதவிய தனத்தை சென்னையில் கொடுத்துவிட்டுப் ௫௰௨ (14-9-17) பர்மாவின் கண்ணுள்ள மாந்தளை ரெயில் லயன் எமெ தீனுக்கு நிவேதனத்துக்கு சேவகங்காரணமாய் வந்து சேர்ந் தனம். வரும்போதும் வந்த பின்னும் தேச சேவை செய்யவேணு மென்ற எண்ணம் அடிக்கடி இருந்து வந்ததெனினும் கூண்டில் அடைபட்ட பறவைபோல் சேவக முறையால் தடைப்பட்டது. தர்மம் குறைந்து அதர்மம் மிகுதியாய் ஏற்பட்டதின் பயனாய் எழுந்தகொடிய யுத்தத்தில் ரணக்களம் சென்று கருணை தங்கிய பிரிட்டிஷ் ராஜாங்கத்தாருக்கு உதவி செய்தல் அவசியம் இந்தி யாவிலுள்ள பற்பல வகுப்பினரும் சென்று ஊழியஞ் செய்கின் றார்களே நம்மவர்களிலும் இரண்டொருவர் சென்றாரென்றபெய ரை நிலைநாட்டுதல் நலமென எண்ணினேன். வருடக்கண்டிசனை விலக்கவேண்டியதிருந்ததால் அவ்வெண்ணம் மறைவுபெற்றது. ஸ்ரீகந்தவேளின் கும்பாபிஷேகத்திற்கு நவுலியப்பன் நகரத்தார்

அழைப்புக்கிணங்கி சென்று ஜீவகாருண்ய மென்ற தர்மத்தைப் பிரசங்கிக்க நேர்ந்தது. அதன்பின் நான் வேலையாகச் செல்லும் இடங்களில் நம் நாட்டார் தற்காலத்திற்கு ஏற்றவிதமாய் மாற வேண்டியதற்கென ஓர் சரித்திரம் எழுதி வெளியிடவேணு மென எண்ணி திட்டம் ஏற்படுத்தி வைத்திருப்பதை குறிப்பிட்டு பிரஸ்தாபித்து வந்தேன் அப்படி வருங்கால் சில நேசர்களுடன் இடையில் ஷான் லயன்செல்ல நேர்ந்தது.

### சத்தியத்தில் சிறந்தார் ஷான்காரரேனலாம்.

இரங்கோனிலிருந்து மாந்தலே செல்லும் நேர்லயனில் தாசி என்றஜங்ஷன் மீஞ்சான் அவும்பான் கிளைமார்க்கம். ஷான் என்பது அவும்பான் கல்லோலயன் சுமார் 62 மயில் ரெயில் பாதையுள்ளது எங்கு பார்க்கினும் அடர்ந்த மலைப்பிரதேசமே ஒவ்வொருமலையிலும் ரெயில்வேலயன் அடுக்கடுக்காயுண்டு சீதளம்மிகுந்தது ஒவ்வொருயிடங்களில் 4,000ம் அடிக்குமேல்ப் பட உயரங்களுமுண்டு பனிகாலம் ஐரோப்பியர் மிகுதியும் வந்து கல்லோவில் வஸிக்கின்றனர் அவும்பான்வரை ரெயில் பாதையுண்டு எனினும் அதற்கு மேலுள்ள 10, 12 மயில் தாயோம் வரைரெயில் லயன் போடுகின்றனர். அவும்பான் ஷான் லயனில் வியாபாரத்துக்கு முதன்மையானயிடம். அங்கு அனேகமாய் பண்டமாற்று ஜாஸ்தி (பண்டமாற்று ஒருசரக்கை கொடுத்து விலைவைத்ததற்கு மறுசரக்கை வாங்கல் இது ஆதிகாலத்தில் நம்நாட்டில் மிகப்பிரசித்தமாயிருந்தது) குளிர்ச்சியான மண்ணுக்கு ஒத்தபலவிதச் சரக்குகள் உற்பத்தியாகிவருவதுடன் பஞ்சும் கோதுமையும் மிகுதி. உப்பு எண்ணை முதலிய சில சரக்குகள் அங்குபோய் விலையாகின்றன முன்ஷான்வியாபரத்துக்குக்கென பியோப்புவேயில் தங்கியிருந்த போசாக்கள் ரயில்வேலயன் ஏற்பட்டபின் அவும்பானில் தங்கிவருகின்றனர். ஒவ்வொருவரும் கமிஷன் வேலைசெய்பவர்கள். அவும்பானிலும் மெக்டிலாவிலுந்தான் துருக்கியர் ஜெர்மனியர்களை சிறைவைத்திருந்தது அவும்பானிலிருந்து டவுங்கி என்பது சுமார் 45 மயில் இடையில் கொஞ்சம்விலகி ராசாக்கொவும் என்ற ஏவுஞ்சுனை உண்டு அப்பக்கத்தில் முழுதும் ஷான் ஜாதியார்களே. அவர்களிலே

சோப்புவா என்ற சிற்றரசர் பலருண்டு. ஞவுஞ்சுவையில் வெள்ளையானை இருந்தது தவறிச் சமாதிசெய்திருக்கிறதெனக் கேள்வி இப்ப வெண்காக்கை ஒன்றுண்டு அதை நிரம்பப் பதன மாயும் அருமையாயும் அந்த அரசர் வைத்திருக்கின்றனர். கைத்தொழில் மிகுதி. தங்களுக்குவேண்டும் சாமான்களை தாங்களே செய்து கொள்ளும் திறமையுடையார் சத்தியசீலர் எல்லாவிடங்களிலும் பஞ்சாயத்துச் சபைமாதிரியான நியாய சபைகளுண்டு ஞவுஞ்சுவையில் ஓர் ஐரோப்பிய டிப்டி கமிஷனருண்டு. ஞவுஞ்சுவை அரசர் காசிக்கு 2, 3 தரம்போய் வந்தவர். வயது முதிர்ந்தவர், ஆசார ஒழுக்கத்தையும் சுத்தபோஜனத்தையும் கைக்கொண்டவர். நம்இந்தியதேச ஆலயமாதிரி புத்த ஆலயமொன்று கட்டிவருகிறார். அயல்தேசப் போலிச்சாமான்களுக்கு பொருளைக்கொடுத்துக் கெடுத்துவிடாதீர்களென தங்கள் சாமான்களை தாங்களே உபயோகித்து குடிகளையும் நடக்கும்படி தூண்டிவருபவர். ஷானில் போதை வஸ்துக்கள் மிகுதி. கோர்ட்டு சம்பந்தமான ரிக்கார்ட்டுகளுக்கு ஸ்டாம்பே கிடையாது. ஷான்பாஷை என்பது பெயருக்குத்தான் எல்லாம் பர்மா பாஷையே. சமபூமியில் வெள்ளாமை செய்ய மாட்டார்கள் ஒரு ஏர்க்கட்டியே உழுவார்கள். மாட்டுப் பொதிகளிலே சரக்கை ஏற்றுவர். தண்ணீரும் நிலங்களும் மிகுதி. சரியாக வெள்ளாமை செய்பவர் மிகுதியில்லை. மாந்தளை பயாவுக்கு கோபுரம் 4 லட்சம் செலவு செய்து கட்டியவர் ஞவுஞ்சுவை அரசரே. ஷானிலிருந்து 20 நாள்ப்பிரயாணம் சீனதேசம் அங்கு செல்லும் போதை வஸ்துக்களுக்கு பதில் சுயமான தங்கம் பட்டுத் திரியலும் மிகுதியாய் வந்துகொண்டிருக்கின்றது. வசிப்பதற்கு மிக ரம்மியமான தேசம். ஒவ்வொருவரும்போய் பார்க்கதக்கது இந்த மலைப் பிறதேசமாகும்

## பர்மா தலைநகரேன்பதில் தானேடுத்துரைத்தல்.

பின் ஒரு சமயம் இரங்கோனில் தங்கநேருங்கால் 6 நாள் சாப்பாட்டு நாளாய்ச் செல்கிறதேயென எண்ணி ஓர் நேசரின் கூட்டுறவால் சி. ரா. ம. சி ஏஜண்டு. உத்தமோத்தமராகிய கனம் சதாசிவச் செட்டியாரவர்களைக்கண்டு எனதபிப்பிராயத்தை தெரி

விக்க அவர்கள் உதவியால் பெரிய கூட்டமொன்று இரங்கோன் நகரத்தார் ஆறரை மேல் வீட்டில் காலயுக்திஞு சித்திரைமீ உகூஉ புதன்கிழமை பிற்பகல் ச மணிக்கு கூடப்பட்டது. சுமார் 200 பெயர் கூடிய அப்பெரிய கூட்டத்தில் நான்மனதில் வைத்துள்ள தேச முன்னேற்றத்திற்கான விஷயங்களை சுமார் 3-மணி நேரம் பேசினேன். நகரத்தார்கள் அனைவருக்கும் தங்கள் சீர்திருத்தத்தில் உள்ள அவாவை நிதர்சனத்தில் (அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும்முகம்) அங்கு கண்டேன். என் பிரசங்கத்துக்கு தலைமைவகித்தவர் அச்சந்நதியில் வீற்றிருக்கும் ஸ்ரீ பிரபு சண்முக தேவர்தான் "யாகாவாராயினும் நாகாக்க காவாக்காற் சொல்லிழுக்கபட்டுத் துன்புறுவர்" என்ற பெரியார் வாக்கியத்தை விடாது ஞாபகத்தில் வைத்திருப்பேன். சண்முகப்பிரபுவின் கருணையும் உதவியாயிருக்குமாதலால் சந்நதியில் பேசுவதற்கே அவாவுண்டாகிறது.

**கான்பரன்ஸ் கண்டு கனவருத்த மெய்துதல்.**

டாங்கோவில் 27-28-$\frac{2}{18}$ நடைபெற்ற பர்மா எடுகேஷனல் முஸ்லீம் கான்பரன்சுக்கு அத்யந்த நேசரொருவரின் அழைப்புக்கிணங்கி செல்ல நேர்ந்தது. அதில் சில நிமிடநேரம் இந்து முஸ்லீம் ஒற்றுமையைப் பற்றிப் பேச முன்னே தெரிவித்துக் கொள்ளாததால் எங்களுக்கு அனுமதி கிடைக்கவில்லை. அவர்கள் நடத்தின கான்பரன்சின் வைபவம் முன்னேற்றத்திற்கு எவ்வளவோ சாதகமானது. ஒருவர் தீர்மானம் கொண்டுவரின் உடனே ஆதரிக்கவும் எதிர்க்கவும் எத்தனையோ பெயர்கள் தயாராயிருந்தனர். எவ்வளவோ பின்னடைந்திருந்த முஸ்லீம் சகோதரர்களின் கல்வி அக்கான்பரன்சை பார்த்ததிலிருந்து நன்கு வெளியாயிற்று நமக்கென பல அஸோசியேஷன் ஏற்பட்டுத் தலை நகரத்தில் நாட்டுக்கோட்டையார் கான்பிரன்ஸ் எப்பக் கூடுமோ அதைக் கண்ணால் காணும் நாள் எப்ப வருமோ வென மிக ஆவலோடு எதிர் பார்த்திருந்த எங்கள் மனமார்னது அக்காலம் சமீபித்துவிட்டதென சாந்தப்படுத்தி தேச சேவை செய்ய முற்படும்படி தூண்டிக்கொண்டிருந்தது.

**புத்தகாலயத்தை புதிதாய் திறந்தனர்.**

எமக்கு நேயர்களும் ஜாஸ்தியாகினர் எங்களுடன் டாங்

கோவில் முஸ்லீம் கான்பரன்சைக் கண்ணுற்ற இந்துக்கள் அவ்வூரிலே இந்துக் கான்பரன்ஸ் ஒன்று நடத்த வேண்டுமென எண்ணி அவ்வூரினுள்ளாரிடம் அனுமதி பெற்று ஸ்பெஷல் மீட்டிங் ஒன்றையும் ஸ்ரீமாந் ராமக்கோனு ரென்பவர் நடத்தினர். அதில் "ஒற்றுமை" என்பதைப்பற்றி ஆரம்பத்தில் என்னைப் பேசவும் செய்தனர். கவர்மெண்டார் ஆர்டர் அச்சமயம் கிடைக்காததால் இந்து கான்பரன்ஸ் கூடவிருந்த அவ்வெண்ணம் புத்தக ஆலயமாய் மாறியது. டாங்கோ டிப்டி கமிஷனர் தலைமையிலே தற்சமயம் புத்தகாலயம் நடந்து வருகின்றது.

## குருநாதர் வருகையை குறிப்பாயுணர்த்தல்.

காலயுக்திஹு தைமீ டிவ 18-1-19 சனிக்கிழமை தைப் பூச உற்சவத்தில் இரங்கோன் நகரவைசிய நகரத்தார்கள் பசுமந்தான் அன்னதான மடத்தில் கல்வியாளரும் ஆரோக்கியரும் செல்வகுலசீலசம்பந்நருமான உத்தமர் பிகுநாசித கடை ஏஜண்டு கண்டனூர் சோமசுந்தரம் செட்டியாரவர்கள் தலைமையில் யான் "குருநாதர் வருகைக்கு நாம் ஆஜராயிருக்க வேண்டியதையும்" இன்னும் சில நண்பர்கள் "ஒற்றுமை" "பத்திரிக்கையின் பயன்" "சங்கம் வேண்டியதின் அவசிய" மென்பதைப் பற்றியும் வெளியிட்டோம். பேசுவதென்பதே இன்னதென அறியாத வென்னை பத்திரிகையின் பயன் இன்னதெனக் காட்டி அதை உணரும்படி செய்து வைத்தவர்கள் கனம் இராயவரம் வெ மு பசு விஸ்வநாதஞ் செட்டியாரவர்களே யாகும் நல்லாரிணக்க மென்பதை இதனாலே எளிதில் அறிந்து கொள்ளலாம். பிறர்க்குரியாளனாகிய நாம் தனக்கென வாழ்வதெப்படி யென்ற யெண்ணம் வலுக்கத் தொடங்கியது. நாம் சுலபத்தில் சிற்சில விஷயம் அறிந்து கொண்டதைப்போல் பலர்களையும் அறிந்துகொள்ளச் செய்யவேண்டுமென்ற அவாமிகுந்தது.

## எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்.

ஆனால் நமக்கு இது புதிதா? அல்ல ஆகிலும் இடையில் விட்டு விட்டதால் புதிதுபோல் தெரிகின்றதுமாத்திரமேயாம் என்பதை பலர்களுக்கும் வெளியிட்டு தூண்டி எல்லாரையும்

விரைவில் ஒன்று கூடும்படியான முயற்சியை செய்யவேணு மென்ற எண்ணம் ஓங்கியது. சிற்சில சமயங்களில் டாங்கோவில் விஷயம் அனேகமாய் வெளியிட்டிருக்கிறேனாதலால் சீர்திருத்த வேண்டுகோளென துண்டுப்பிரசுரம் ஒன்று வெளியிடுவதற்கு மேன்மை தங்கிய டாங்கோ நகரத்தார் அனுமதி பெற்று சுமார் 100 ஊர்கள்வரை 2000 பிரசுரங்கள் அனுப்பப்பட்டன. சிற்சில ஊர்களுக்கு தகவலும் தெரிவிக்கப்பட்டன. பங்குனி மாதத்துகுள் ஐந்து பேரிடமிருந்தே பதில் வந்தது. கூட்டம் கூடுவதில் அபிமான முண்டாயினும் பதில் எழுதப் பலர் முன்வரவில்லை. அது நாம் கைக்கொண்ட வழக்கமாகும். சித்தார்த்தி௵ சித்திரை மீ ௰௨௳ 25-4-19 வெள்ளிக்கிழமை வாகீசப்பிரபுவாகும் அப்பர்சுவாமிகள் குருபூசையன்று டாங்கோவில் ஒரு கூட்டத்தைக் கூட்டி பிரசங்கம் செய்யத் தெரிந்தாரைக் கொண்டு நம் நாட்டின் தேள்வைகளையும் மாறுதலிலுள்ள ஆவல்களையும் தெரிவித்துக் கொண்டால் விரைவில் பலர்கள் பின்பற்றுவார்களென வெண்ணினேம். உரிமையாளர் பலரில் சுசீலரும் தேசாபிமானம் பாஷாபிமானத்தில் மிக்க சிறந்தவருமாகிய எம் நகர்வாசி சொவ் மங்கைசெ. அ. கடை பாகஸ்தரும் ஏஜண்டுமாகிய அண்ணாமலை செட்டியாரவர்கள் செல்வப்புதல்வர் இராமசந்திரபுரம் நாராயண மகிபர் வாகீசப் பெருமான் குருபூசையன்று தம்நேயர்களுடன் டாங்கோவுக்கு விஜயஞ் செய்வதாய் காலயுக்தி௵ மாசிமீ உ௰௭௳ ஓர் லிகிதம் அனுப்பினர். பின் அந்த உத்தம சீலர் அகால மரணத்தால் தெய்வலோகஞ் சென்று சர்வேஸ்பரன் திருச்சந்நிதியில் இடையறாது வீற்றுநம் தேய நன்மைக்காக அனுதினமும் வேண்டிக்கொண்டே யிருக்கிறாரென்பதை அவர் ஆத்மா நீங்குங்கால் சுகஸ்தலிகிதமாய் எழுதிவைத்துச் சென்ற அருமை வாக்கியங்களே நன்கு தெரிவிக்கின்றன. "ஐயுந்தொடர்ந்து விழியுஞ் சொருகி அறிவழிந்து மெய்யும் பொய்யாகி விடுகின்றபோதொன்று வேண்டுவன்யான் செய்யும் திருவொற்றியூருடையீர் திருநீறுமிட்டுகையுந் தொழப்பண்ணி ஐந்தெழுத்தோதவும் கற்பியுமே" "நேற்றிருந்தார் இன்று வெந்து நீறானார்" இருப்பது பொய் போவது மெய் "நீர் மேல்க் குமிழியின் காயம் நில்லாது ஒருநாளும் சொன்னேன் உபாயம்" எனப் பலவாறு

பெரியார் புகன்றிருக்கின்றனர். நண்பரை நேரில் பார்க்கும் காட்சி கிடைக்கவில்லையே தவிர அவரது ஆசீர்வாதம் கிடைத்து வருகின்றது அவரது மேற்ப்போர்வையாகும் அங்கி அழிந்ததே தவிர ஆத்மாவாகும் ஜீவன் அழியவில்லை அவரது அவா விரைவில் நிரைவேறும்படி எமக்கு பலவழிகளினும் ஆதரவாயிருந்தது டாங்கோதான். அவ்வூர் (டாங்கோ) பர்மாவுக்கு முதன்மையான விடம் ஐரோப்பியர் பர்மாவின் தலைநகராகும் இரங்கோனைக் கைக்கொண்டு மாந்தளையைப் பிடியாதிருக்கும் காலத்தில் டாங்கோவரையில் ரயில்வேலபன் போட்டு பட்டாளங்களையெல்லாம் அவ்வூரிலேயே தங்கவைத்திருந்து பின் மாந்தளைக்குப் படையெடுத்துச் சென்றனரென கேள்வி. அப்படை வகுப்பினரில் தலைமையாயுள்ள இந்து உத்தியோகஸ்த்தர்களிருக்குங் காலத்தில்தான் டாங்கோவில் பெயர் பெற்ற சிவாலயமும் காளியம்மை கோவிலும் எற்பட்டது. அக்கோவிலை ஆதரிப்பாரில்லாது முன்னிருந்த இந்துக்கள் மில்ட்டேரி செல்லுமிடம் சென்றுவிட்டதால் மற்ற இந்துக்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்கி தர்ம பரிபாலர்களாகும் எம் தனவைசியர்கள் தங்கள் சண்முகநாதன் ஆலயத்துடன் இரண்டு தேவஸ்தானங்களையும் ஒவ்வொருவரும் இனி மாறவேண்டியதான 3 வருடத்தில் ஒரு மாதச்சம்பளம் கொடுப்பதாய் தீர்மானித்து நடத்திவருகின்றனர். காளியம்மை கோவிலுக்கு சில சொத்துக்களுண்டு. டாங்கோவிலும் அடுத்த சில ஊர் நகரத்தார்களுடனும் கலந்து காரியத்தை ஆரம்பிப்பதைவிட பர்மாவிலுள்ள பல நகரத்தார்களையும் கலந்து ஆரபஞ் செய்தல் நலமென நாம் காணும் பலர்களில் முக்கியமானவர்கள் தெரிவித்ததால் "எண்ணித் துணிவது கருமம்" "நுண்ணிய கருமமும் எண்ணித் துணி" என்ற மேலாரது வாக்கை சிரமேற்கொண்டு எதற்கும் முக்கியமாய் வேண்டியது ஒற்றுமை. ஒற்றுமை இல்லாவிடின் எவ்வித காரியம் செய்யவும் அபிவிருத்திக்குக்கொண்டு வரவும் முடியாதென வெண்ணி பக்கோ சித்திராபவர்னை உத்ஸவத்தில் நாம் செய்ய வெண்ணியுள்ள வேலைகளைப்பற்றி தெரிவிக்க தங்களால் முடிந்த உதவி

செய்வதாய் உடனே சந்நிதானத்தில் எழுந்து குறிப்பிட்ட நகரத்தார்களது திருவாக்கைப் பெற்று பல ஊர் நகரத்தார்களிடமும் உதவி பெறலாமெனத் துணிந்து வைகாசிமீ உ 18-5-19 ஞாயிற்றுக்கிழமை ஞானத்தை உலகத்தாருக்கு சம்பந்தப்படுத்தி வைப்பதற்காக அவதரித்த குருநாதன் திருஞானசம்பந்தஸ்வாமிகளின் குருபூசையன்று ஐக்கிய சங்கம் (அஸோசியேஷன்) ஸ்தாபிக்க முன்னம் துண்டுப்பிரசுரம் வெளியிட அனுமதி தந்த டாங்கோ நகரத்தார்களிடமே அனுமதியைப் பெற்றோம். நம் நாடுகளில் ஆரம்ப சூரத்தனமாக அனேக சங்கங்கள் ஏற்பட்டு பலர்களது அனுமதியைப் பெறுதும் பெற ஏதுவில்லாமலும் சிற்சில வருடங்களுக்குள் டாம்பீகமாய்ச் செலவிட்டு கையிலுள்ள பொருளும் தீர்ந்து, சாப்பாட்டுச் சங்கங்களாயிருந்தவிடந் தெரியாது மாறிவிட்டன என்பதை உலகானுபவத்தால் நன்கு அறிந்து சங்கத்துக்கு உதவியாக வேண்டிய உபகரணங்களாகும் செல்வப் பொருள்களையும் அனுமதியையும் முன்னமே ஒவ்வொரு யிடங்களுக்கும் சென்று பெற்று சீர்திருத்த முன்னேற்றமென்ற கட்டிடத்தை ஒற்றுமை என்னும் அஸ்த்திவார பலத்துடன் ஆரம்பித்து நன்கு கட்டி முடித்து ஐக்கியமென்ற தோழனுக்கு அந்த உறைவிடமான வாசஸ்தானமாக்கி அப்பொதுவான ஸ்தானத்தில் அபிமானமுள்ள பலர்களும் நியதிப்படி கூடி தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை விகசிதமாக எடுத்துச் சொல்லி எல்லோரும் ஓர் வழிக்கு வந்து தேச நன்மைக்கான விஷயங்களை சிலர் அனுஷ்டித்து காட்டி பலர்களை அனுஷ்டிக்கும்படி கேட்டுக்கொள்ளவும் தொடர்ச்சியான பிரசார வேலை செய்து அதன் பயனை விரைவில் எல்லோருங் கைக்கொள்ளவும் ஏதுவாகுமென நிச்சயித்து வெளி வந்தோம்.

## நாட்டுப்புர நகரத்தார் காட்டிய நலம்.

எங்களது முதல் பிரயாணம் மிகரம்மியமானது மிகத்தூரமாகிய ஆற்றுமார்க்கம் மீஞ்சானிலிருந்து பக்கோகூ மக்குவை மீம்புவரை சென்று திரும்பினோம். தேசமுன்னேற்றத்திற்கான

விஷயங்களை கேட்டதும் எங்களிடம் ஒவ்வொருவரும் அவர் களது அவாவையும் அபிப்பிராயங்களையும் தெரிவித்தனர் இதுவரை பொருள்தேட வந்தவர்களெல்லாம் கோவில் குளம் நந்தவனம் பசுமடம் கட்டுகிறோமென வந்தார்கள்; இப்பொழுது தான் நம் நாட்டின் குறைதீரும் திருப்பணிகட்டவேணுமென் பதைக் கேள்வி யுற்றோம். ஆதலால் நமக்கு நற்காலம் வந்த தாக்குமென புகழ்பாடினர்; ஆசீர்வாதமளித்தனர்; ஒவ்வொரு வரும் உளமகிழ்ந்தனர்.

## பூமியின் மாறுதலைப் புனிதமாய்க் கண்டோம்.

வைகாசிமீ ௩௰௨ உ பக்கோக்கூ மார்க்கம் பிராயணத்தில் மீம்பு சென்று காடி மார்க்கம் சக்கூ செல்லுங்கால் இடையில் சேற்றுக்கேணி ஒன்று காணப்படுகிறது. நுரையும் சேறுமாக விருந்த அந்தக் கேணி இப்பொழுது பெரிய மலையாகி வருகின் றது. அதன் சமீபம் சென்றதும் சாம்பிராணித்தைலம் சேர்ந்த விபூதிபோல் சுகந்த வாசனை உண்டாகின்றது. ஒவ்வொரு வாரம் ஒவ்வொரு பக்கம் வடிந்தும் சுற்றுப்புறங்களிலெல்லாம் மண் முழுதும் வெண்மையாகவும் யிருக்கின்றது அந்த யிடத்தில் பர்மியர் பாத ரக்ஷையை அகற்றிவிட்டு அதனுச்சிவரை சென்று பூமாதேவி தோள் மாற்றும்போது ஏற்பட்ட வெடிப்பென்று சொல்லி அதை பயபக்தியுடன் வணங்குகிறார்கள். பூமியி லிருந்துதானே தங்கம் வெள்ளி செம்பு இரும்பு காந்தம் அக்கினிக்குழம்புகளெல்லாம் உண்டாகின்றன. பல தேசங்கள் சஞ்சாரஞ் செய்து அனேக விஷயங்களை அறிந்துவருகிறவர் களுக்கு இதொரு அருமையல்ல. நம் நாட்டவர்களுக்கோ அருமைதான். அயல்தேசங்களில் பூமி வெடிப்பில் அக்கினிக் குழம்பு உண்டாகித்தான் எவ்வளவோ தூரத்திலுள்ள ஊர் நகரங்களை பாழ்படுத்திவிடுகின்றது. நம்மைப்போல் பர்மியர் களும் கண்டதெல்லாம் தெய்வமெனக் கொண்டாடுபவர்கள் நம் பழக்கம் அவர்களுக்கு சாஸ்தியானதால் போலும். ஏனஞ்சான் என்பது மண்ணெண்ணை எடுக்கும் கேணிகள் பல இருக்குமிடம். அதற்குப் பக்கத்திலுள்ள ஊர்களிலும் கேணிகள் பல உண்டு.

கேணிகளை வெட்டி எவ்வளவோ ஆழங்களிலிருந்து ஒருவித கசடாயுள்ள பச்சை நிறமான மண்ணெண்ணை எடுத்து வந்து அனேக கம்பனிக்காரர் குழாய் மூலமும் ஸ்டீமர் மூலமும் இரங்கோனை அடுத்துள்ள தனியனுக்கு அனுப்பி மிஷினுல் வேலை செய்து தனியெண்ணையாக்கி விற்று வருகின்றனர். அதில் வடி கட்டி மீதமாகும் கசடை மிசின்களுக்கும் ரோட்டுகளுக்கும் உப யோகித்து வருகின்றனர். தள்ளுபடி என்பது ஒன்றுமில்லை நம் மனந்தான் தள்ளுபடியென எளிதா யெண்ணுகின்றது. எதினுல் உலகானுபவத்தையும் உலகவஸ்துக்களையும் கல்வியைக் கொண்டு அறியாத தன்மையாலும் சோம்பேறி அரசரயும் மடாதிபதி களாயும் மடச்சாமிகளாயுமிருந்து வருவதாலுந்தான். அயல் தேயத்தார் இந்திய தேயம் வந்து இந்தியர்களையே சொல்பக் கூலிகளாக அமர்த்தி இருந்த ஆசனத்தைவிட்டு இறங்காது நம் எஜமானர்களாயிருந்து நம் தேய மூலப்பொருளை மாற்றி நம் டமிமே வைத்துக்கட்டி கஷ்டப்பட்டு தேடிய பொருளைக் கொண்டு போகின்றனர். அதைப் போலவே பஞ்சு முதலிய பல வஸ்துக்களும் நாம் பிறத்தியாரிடம் பொருளைக் கொடுத்து அந்நிய சாமான்களைப் பெறுவதில், பிரபுக்களே நமக்கு யென்ன சொந்தம். அரிசியும் காய்கரியும் சமைக்கும் மண் பாண்டங் களுமே. மற்ற அனைவற்றும் இரவல்தான். தேச பக்தியாலும் கல்வியாலும் ஒற்றுமையாலும் நம்பிக்கையாலும் அயல்தேயத் தார் பலவிதத்தும் மேன்மை யடைகிறுர்கள். ஒருவர் செய்யமுடி யாத தொழிலை பலர் சேர்ந்து செய்கின்றனர் தெரிந்ததை விர்த்தி செய்கின்றனர் நாம் தெரிந்துகொண்டதை பிறர் அறிந்தால் நம் காரியம் கெட்டுவிடுமென எண்ணி நாமும் செல்லாது பிறரையும் அவ்வழியில் செல்லவிடாது பலவிதத்தும் நம் தேயத்துக்கு தடைக்கல்லாயிருந்து வருகிறோம்.

### சத்திய உண்மை சாற்றிவிளங்குதல்.

பக்கோவுக்கு அடுத்தது பக்காஞ்ஞா ஞாவு என்ற பெயர் அதில் ஆனந்தப்பயா எனபெரிய கோவில் ஒன்றுண்டு சத்தியப் பாக்குவெட்டியென தொன்றுதொட்டு இருந்துவந்ததாயும்

அதில் ஹிந்து அரசர்கள் ஆண்டுவந்ததாயும் தெரிகிறது. ஆலயத்தில் சிற்சில யிடங்களில் சமஸ்க்கிருத பாலிஎழுத்துக்கள் வெட்டப்பட்டிருக்கின்றன. சத்திபப் பாக்குவெட்டியின் விசேடம்யாரும் பொய் சொல்லித்தங்கள்கையை இடையில் நீட்டினால் அக்கையையோ விரல்களேயோ துண்டித்துவிடும். அவ்வூரில் நியாயத்தீர்ப்புச்செய்யும் பஞ்சாயத்துச் சபையார் கக்ஷிக்காரரை அவ்வாலயத்திலுள்ள சத்தியப்பாக்கு வெட்டியிடம் செல்லும்படி அனுப்புவது வழக்கமாம். சிலவருடங்களுக்கு முன் ஓர் தட்டானிடம்ஆபரணம் செய்ய ஒருவர் பொன் கொடுக்க அவன் பொன்னைத் தந்தவரிடம் கொடுத்துவிட்டதாய் சொன்னதால் நியாயசபைசென்று நியாயம் பெறக் கருதிய வாதி வழக்குத்தொடர பிரதிவாதியாகும் தட்டான் ஓர் கைப்பிரம்பின் பிடியுள் ஆபரணஞ் செய்யத்தந்தபொன்னை வைத்துத்தெரியாது தகடுபோட்டு மருவிசத்தியஞ் செய்வதற்காக நியாயதுரந்தரருடன் ஆலயத்திலுள்ளபாக்குவெட்டியிடம் செல்லுங்கால் வாதிபொன் ஆபரணம் செய்யக்கொடுத்தது வாஸ்தவந்தானென பிரமாணஞ்செய்தபின் பிரதிவாதிகையிலுள்ள சோட்டாத்தடியை சம்பிரதாயமாய் இந்தாவைத்துக்கொள் என்றுவாதியிடம் கொடுத்து கையை நீட்டி நான் வாங்கியிருந்த பொன்னை வாதியிடம் கொடுத்துவிட்டேனெனவும் இரண்டு விஷயத்துக்கும் தூக்கிக்கொண்டிருந்த பாக்குவெட்டி துண்டிக்காதிருந்ததால் அன்றிருந்து பாக்குவெட்டியை சத்தியம் கெட்டுவிட்டதென அப்புறப்படுத்திவிட்டனரெனவும் பிரஸ்தாபம். என்னே சத்தியத்தின் உண்மையும் மனிதர்களின் சாமர்த்தியமும்!

## சங்கம் ஸ்தாபிக்கச் சம்மதம் பெறுதல்.

நவுலியப்பனிலும் பக்கோவிலும் எங்களுக்கு நடந்த உபசாரத்தையும் அவர்கள் எங்களுக்கு உண்டாக்கிய உற்சாகத்தையும் என்னென்று சொல்லுவோம். அவர்கள் எங்களிடம் காட்டிய ஆதரவு எங்களுக்கு காட்டுவதல்ல. நாம் எடுத்துக்கொண்டகைங்கரியத்துக்கு காட்டுவதென எண்ணினேம். ஒவ்வொருவரும்

இரங்கோனில்தான் அசோசியேஷன் வைத்து நடத்தவேண்டும் அவ்வூர்நகரத்தார்கள் உதவியை ஏன் பெறப்போகவில்லையெனவும் பெரியவூரிலிருந்து பார்த்துவந்தால் தொகைசாஸ்திசேருமென்றும் அடிக்கடி சொல்லிவந்ததால் தொகுத்துவந்த பொருளை அவ்வப்பொழுது இரங்கோனிலுள்ள ஓர் அபிமான சீலரின் கடைக்கு அனுப்பி ரூ 3000த்துடன் தலைநகராகும் இரங்கோன்சென்றோம் அங்குசென்றது நாங்கள் ஐந்துபெயர். 3நாள் தங்கி முன்சிற்சிலர்களைக் கலந்து வைத்திருந்ததோடு ஒவ்வொருநாளும் இரண்டு தடவை நகரத்தார்களது கடைகளைவிட, தனிஜாகைகளுக்கும் சென்று வருவோம். அங்குநாங்கள் எடுத்துக்கொண்ட விஷயங்களையும் எங்களையும்பற்றி நடந்தசம்பாஷணைகளோ அனந்தம். பொருள் செலவிடாத வாய்ப்பத்திரிக்கை எங்குபார்த்தாலும் பரவிற்று. ஒவ்வொரு நாளும் எங்கள் மனத்தை ஒவ்வொருவரும் பேதலித்துக் கொண்டேவந்தனர். ஓர் பெரியதனவந்தர் கடையிலுள்ள ஏஜண்டு கக்ஷியில்லாத இரங்கோனில் கக்ஷியை ஏற்படுத்த ஒற்றுமை என்ற பெயர் சொல்லிக்கொண்டு வந்தீர்களா யெனவும் கேட்டார், அதுவும் நலத்திற்கே பொதுநலத்திற்கேற்பட்டால் எல்லாந்தானே வருமென சமாதானஞ் செய்து கொண்டு அப்படியெண்ணுதீர்களென பதில் கொடுத்தோம். பொருள் பொருள் என பஞ்சாட்சர உருப்போடும் இரங்கோனாதலால் தைப்பூச சமயத்தைவிட வேறு சமயங்களில் கூட்டம்கூடுவதென்பது கிரம்பப்பிறயாசைதான். ஏது இவர்கள் விடமாட்டார்களென நகரத்தார்கள் கருதி நாலாநாள் காலையில் நாங்கள் வந்துள்ளவிஷயத்திற்கு கூட்டம் கூடவேண்டியது அவசியமா என்பதைப்பற்றி அஞ்சடியில்கூடி ஒரு விதமாய் தெளிந்து ஆவணிமீ˚ சஉ (20-8-1920) புதன்கிழமை 3 மணிக்கு கூடுவதாயிருந்து அவர்கள் வந்தார்களா இவர்கள் வந்தார்களா என்ற விசாரணையாலும் மழையாலும் 7-மணிமுதல்கூட ஆரம்பித்து ஒரு அறைக்காரர் முன்னால்வந்து உட்கார்ந்ததின்பிறகு மற்றெல்லாரும் வந்துகூடி எங்களிடம் முக்யமான விஷயங்களையும் அசோசியேஷன் ஏற்படுத்தும் நோக்கத்தையும் தெரிந்து கொண்டு எதாவது சிலதொகையைக் கொடுத்து வேறுஎங்காவது

நடத்தும்படி செய்யவேணுமென்று மனதுள் எண்ணியிருந்த எண்ணம் சுழல்போல்மாறி எல்லாவசதியும்வாய்ந்த அவ்வூரி லேயேவைத்து நடத்தவேணுமென வற்புறுத்தினர். நாட்டுப்புற நகரத்தார் எண்ணப்படி எங்களது நோக்கம் கைகூடியதால் ஆமெனஒப்புக்கொண்டு இரங்கோன் கனம் தங்கிய நகரத்தார் களால் பொதுவில் மிகமகிழ்வுடன் உதவுவதாய் சொன்ன ரூசதரூபாகஆகிய ஒரு பெருந்தொகையையும் போதும்போதாத தற்குபின் உதவுவதாய் சொன்ன வாக்கையும், எம் ஆதிவார்த் தையை உருவகப்படுத்திவைத்த கலியுகவரதரும் நம்பினோரை இரக்ஷித்தருளும் சர்வவியாபகரது அருமைத் திருக் குமாரரு மாகும் ஸ்ரீ சண்முக பெருமானது மகா மகிமை வாய்ந்த திருச் சன்னதியிலிருந்து பெற்று பர்மாமுழுதும் பிரயாணஞ் செய்வ தாய் சிற்சில ஊர் சென்று பின் மாந்தளே சென்றோம்.

## மாந்தளே நகரின் மாவளம் கூறுவோம்.

அவ்வூர் நகரத்தார்கள் பொது விஷயத்தில் மிக்க ஊக்க முள்ளவர்கள். முதலில் எழுதுபவர் கடைக்கு செல்லாவிடின் மனஸ்தாபந்தான். பொதுவிலே எங்களுக்கு உதவி செய்வதற்கு சில வருடங்களுக்கு முன் அடுத்தடுத்து ஆலயம் கட்டும் யாச கங்கள் வந்ததற்கு போட்டி போட்டுக்கொண்டு கெவுரவத்தை உத்தேசித்து பணம் கூடுதலாய்க் கொடுத்துவிட்டதால் கோவி லுக்கு கடன் ஏற்பட்டு இனி எதற்கும் பொதுவில் செய்வதில்லை யெனத் தீர்மானித்துக் கொண்டார்களாதலால் மூன்றும் நாள் இரவு கோவிலில் கூடிக் கலந்து பேசி தனித்தனியாய்ச் செய்வ தெனத் தீர்மானித்து மறுநாள் சிலமணி நேரத்துக்குள் எல்லா ரும் மனமுவந்து நாங்கள் கைக்கொண்ட விஷயத்திற்குப் பொருள் உதவி செய்தனர். பின்பு பயாக்கிக் கோவில் அரச ரது கோட்டை பசார், உள்ளூர் மலையில் கட்டப்பட்டுள்ள பெரிய ஆலயம் முதலியவைகளைப் பார்க்க நேர்ந்தது. பயாக்கி கோவில் அன்பே அவதாரமாயுதித்து உலகத்தாரை நல்வழிப் படுத்திய கவுதமரென்ற சீருயர்பெற்ற சித்தார்த்தரெனும் பகவான் புத்தரது ஆலயம்; எல்லாவிதத்தும் சிறப்புடையது.

அங்கு செல்பவர் மனதைக் கவர்ந்துவிடுந் தன்மையது. மதுரையைப்போல நான்கு கோபுரங்களும் கோபுர வாயில்களும் வர்த்தகம் கைத்தொழில் நிறைந்த வியாபார ஸ்தலங்களும் உள. கோபுரங்கள் தங்கத்தகடுகளால் பொதியப் பட்டும் பார்க்கும் கண்களைக் கவரத்தக்கதாயிருக்கின்றன. அவ்வூர் ராஜ குடும்பத்தாரையும் அக்காலத்திலிருந்த பொங்கிகளையும் தளகர்த்தர்களையும் அங்கங்கு சித்திரங்களால் வரையச்செய்து பார்வைக்கு வைத்திருக்கும் சிருங்காரங்களும் என்னே! பர்மியப் பெண்கள்தான் அந்நகரத்தில் மிகுதியும் வியாபாரஞ் செய்பவர்கள். புருடர்கள் அவர்கள் சொன்னவைகளை பெரும்பாலும் கேட்க வேண்டியவர்களே! பசார் அதாவது மார்க்கட் இப்பர்மாவில் இதைப்போன்றதில்லை. ஒவ்வொரு பசாரிலும் தனித்தனி வியாபாரங்களே. தங்கம் வாங்கச் சென்றால் எங்கும் தங்கம் தான். பட்டு வாங்கச் சென்றால் அப்படியே. டிராம்கார் கடசி ஒரு பக்கம் பயாக்கிகோவில் ஒரு பக்கம். இரங்கோன் செல்லும் ஆற்றுமார்க்கத் துறைமுகம் ஒரு பக்கம். ரயில்வே ஸ்டேசனும் கோர்ட்டும் ஒரு பக்கம். இரங்கோன் ஆற்றுமார்க்கம் 7 நாள் செல்லும் பெரிய ஸ்டீமருண்டு ஏற்றுமதி இறக்குமதி அந்த லயனில் மிகுதி. சனுஞ்சான், பக்கோகூ, மக்குவை, இதே லயன்தான் டிரும்காருடன் காந்த தீபங்களும் பங்காக்களும் வைத்திருப்பதால் பட்டணம் மிக அலங்காரமாயிருக்கிறது. ராஜாவினுடைய கோட்டை கட்டி யிருப்பது நடுமையத்தில் நிரம்ப விசாலம் பொருந்திய இடம். அகில்களும் வழி மாறுதலாகவும் கட்டப்பட்டுள்ளது. மரக்கட்டிடமாகிய கோட்டைக் கட்டிடத்தை துப்பரவுசெய்து பர்மாஅரசரை சேர்ந்தார்பலரை உருவஞ் செய்து வைத்திருக்கின்றனர். அதைக்கண்ணுறுங்கால் அவரது ஆட்சிமுறை சட்டதிட்டங்கள் நன்குவெளிபாகின்றன. சில துராக்கிருதங்கள்மேலிட்டதால் அவர் ஆட்சிமறைவுபட்டதுடன் அவர் பெண் இங்கிலாந்தில் 300ரூ வருவாய் போதாது பரிதபிப்பதை பத்திரிகைகளில் வெளியிடுகிறார்கள். மலையில் ஏற்பட்டு வேலை நடக்கும் ஆலயமோ எமேதீனைச் சேர்ந்த தெய்ங்கொவு

மிருந்து சென்றிருக்கும் சன்னாசி (பொங்கி) யால் நடைபெறுகின்றது அம்மலை ஏறுவதும் இறங்குவதும் திரேக அப்யாசமே. செல்லுங்கால் நிரம்பக் களைப்பு ஏற்படாது சிரமபரிகாரத்துக்காக அங்கங்கு ஆயாசந் தீர்க்கும் நடை சாலைகளும் மண்டபங்களும் அதில் பலர்களுக்கும் வேண்டிய தின்பண்டங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. மாந்தளே அரசருக்கு ஆபத்து வருகிறதென குறிப்பிட்ட ஓர் பொங்கி உருவச் சிலையை மண்டபம் ஒன்றில்ச் செய்து வைக்கப்பட்டிருக்கிறதுடன் தற்சமயமுள்ள பொங்கி (சன்னாசி) யிருக்கும் மண்டபத்தில் குழந்தைப்பருவம் குமாரப்பருவம் முதுமைப்பருவம் கிழப்பருவம் கடைசி பிணக்கோலத்தையும் பிம்மங்களாகச் செய்து வைக்கப்பட்டிருக்கின்றது. நாய் நரி காக்கைகள் பிணமாமிஷத்தை கொத்தி தின்கும் மாதிரியை பார்த்தவுடன் நம் உடலங்களும் இப்படி ஆவது தானே யென பிரமிப்பு ஏற்படுகின்றது. "முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவிலொருபிடி சாம்பலாய் வெந்து மண்ணுவர்தானே" என்பதுபோல் காற்ருேடு காற்ருய் மறு க்ஷணம் மாறிவிடுகின்றது. ஆலயத்துக்கு சுமார் 20 லட்ச ரூபாய் செலவிடப்பட்டிருக்கலாம். இன்னம் வேலை நடந்து கொண்டுதான் வருகின்றது. இப்பொழுதே பழுது பார்ப்பதற்கென பாதித் துகையை வைத்திருந்தால் நலமென எண்ணக் கூடியதாயிருக்கின்றது ஒவ்வொரு படிக்கட்டுகளுக்கும் பர்மியர் அனேகம் பொருள் கொடுத்து அவர்கள் பெயர் எழுதி தொங்கவிட்டிருக்கின்றனர். ஆலயம் பார்க்கச் செல்பவர்கள் அவரவர்கள் இஷ்டம்போல் உண்டியல் பெட்டியில் பணம் போடலாம் கட்டப்பட்டிருக்கும் படிக்கட்டுகளெல்லாம் 2, 3, வருடங்களில் பெயர்ந்து போய்விடும். எதோ புதைபலெடுத்து கட்டுகிருரென்பது நம்பத்தக்கதல்ல. ஒரு பெரிய சச்சுச் செங்கலை ஒரு அணு செலவில் மலையின் உச்சியில் கொண்டு போகச்செய்து கட்டி வருவதில் பொங்கிக்கு எவ்வளவோ பிரயாசைதான். அவரால் பல ஏழைகள் ஒவ்வொரு நாளும் பிழைத்து வருகின்றனர். ஆனல் அவர் இருக்கும் கட்டிடம்வரை ஒரு விதமாயும் அவர் இருப்பதற்குமேல் மற்ருெரு விதமாயு

செய்யலாம் தர்மத்துக்கென 50 ரூபாவுக்குமேல் கொடுக்காவிடின் எண்ணெச்செலவுக்கென 10 ரூபா கொடுக்கவேண்டும். அங்குள்ள வயதுசென்ற ஸ்திரிகளுக்கு நோய்வந்தால் பார்க்க சுதேசமருந்துகளுடன் சுதேச வைத்தியர் நியமிக்கப்பட்டிருக்கின்றனர் ஷ தர்ம ஸ்தாபனத்துக்கு வருபவர்கள் பணம் மிகுதியாக கொடுத்து செல்கின்றனர். இதை நடத்திவருபவள் ஓர்பர்மிய மாதாகும். 40-45 வயதுள்ளவள் புருடனில்லாதவளாதலால் தனக்குள்ள 40000 ரூ சொத்துக்களேயும் தனக்குப்பின் சில பஞ்சாயத்தார் பார்த்து வரவேண்டுமென மரணசாசனம் எழுதி வைத்துவிட்டாள்: தன் சொந்தச்செலவும் தர்மஸ்தாபனத்திலேயாகும். என்னே ஓர் பர்மிய ஸ்திரீ ரத்தினத்தின் தர்மமும் விவேகமும்! இம்மாதிரி அவ்வக் காலத்தில் நம் நாட்டாரும் காலத்துக்கேற்றவாறு தர்மத்தை மாற்றிச்செய்து கொண்டுவரின் எவ்வளவோ பயனும் நலனுமுண்டு.

### தேடாக் கோவில் பாழாய் முடிந்தது.

மாந்தளே சேகரம் மியோ ஆங் ஜங்ஷன் (மேமியோ ஷிவேபோ இருலயன்பிரிவு) சமீபம்தொடர்ச்சியாக பர்மிய அரசர்காலத்தில் ஏற்பட்ட கணக்கற்றகோவில்கள் சிலகமடைந்து தேடுவாரில்லாது இருந்துவருகின்றன! ஒவ்வொருசமயத்திலும் மிகுதியாய் வேண்டப்படாத தர்மங்களேப் போட்டிபோட்டுக்கொண்டு செய்வதின்பயன் இதுவே. மனிதர்களுக்கு ஆயுள்ஏற்பட்டிருப்பதுபோல ஒவ்வொன்றும் ஆரம்பிக்கும்போதே முடிவு ஏற்பட்டுள்ளது. கொலேயும் புலாலேயும் ஒவ்வொருவரும் விலக்கிவிட வேண்டுமென சிறுசிறு ஊர்கள்தோறும் சென்று அரும்பிரசங்க மாரி பொழிந்துமுதலில் சிலமாதங்களுக்காவது மாட்டினம் சாப்பிடலாகாதென வற்புறுத்தி கைக்கொள்ளச்செய்து வரும் லேடி செயாக்கட்டோ என்றவயது சென்ற உத்தமஸ்திரி பழய பவுத்த ஆலயங்களேயும் ஒவ்வொருவரும் புதுப்பித்து செய்து வருதலே சிறந்த தர்மமெனச்சொல்லிவருவதாய் கேட்டு அளவில்லாச்சந்தோஷங் கொண்டோம். நப்பிநாற்றம் இல்லாது சாப்பிட அறியாத பர்மியர்களே கொலேயும் புலாலேயும் விலக்குதல் எவ்வளவோ அருமையும் பெருமையாகும்.

## ஜீவரக்ஷகசாலை திறமையாய் நடத்துதல்.

மியோ ஆங்கிலிருந்து மீங்கே ஸ்டேஷனுக்கு இடையில் தக்குண்டாயின் என்ற சிறுஸ்டேஷன். அதில் வங்காள மாகாணத்தார் நடத்திவரும் ஜீவரக்ஷகசங்கம் உள்ளது. அதற்கு மகமைத் தனத்தை வினியோகித்து வருகின்றனர். அதில் அங்கவீனமுள்ள பசு காளை ஆடு குதிரை கோழி புறா முதலியவைகளை வளர்க்கின்றனர். மாடு ஆடு கொலைசெய்யக்கொண்டுபோவதில் வயதுசென்றதும் உடம்பில் பலமில்லா திருப்பவைகளை கிரயத்துக்கு வாங்கி ஆதரித்துவருகின்றனர். கொலை செய்வதை நிறுத்தி வருவதைவிட சிறந்த தர்மம் உலகத்தில் வேறுயாதிருக்கின்றது? எதற்கும் அஞ்சாத ஜீவர்களும் கொலைஎன்றால் அஞ்சுகின்றன. பரிதபிக்கின்றன கண்ணீர்விடுகின்றன பேசமுடியவில்லையே என எண்ணுகின்றன அம்மா! அம்மா! என்கின்றன. அம் அழகியமா பெருமை வாய்ந்த கடவுளே எனவே இந்தப்பாழும்குடலுக்கு நமக்கு அடங்கியபிராணியாகும் ஆடு கோழி மீன் பறவைகளைத் தானே கொலைசெய்கிறோம். நரி சிங்கம் கரடி பாம்புகளைகொலை செய்யாதது நம்மைஎங்கே கொன்று விடுகிறதோ என்ற பயத்தால் தானே. பசுவதையை எவ்வளவோநாள் விடாது செய்து வந்தமகம்மதிய சகோதரர் இந்துக்கள்மனம் புண்ணுகிறதேயென எண்ணி நம்மிடமுள்ள நேசத்தால் பசுக்கொலையை நிறுத்தியும் பர்மா அத்தின் சங்கத்தார் சிலஊரில் மாடு அடிக்கும் கடையை எடுத்து செய்யாதும் விட்டுவிட்டார்களெனில் கொலை என்பதை கனவினும் அறியாதவர்களும் கொலையாளர்களிடமே கொடுக்கல் வாங்கல்செய்பலாகாதென ஒதுக்கிவந்தவர்களுமான நம்பெருமை தங்கிய சமூகம் இடைக்காலத்தில் துஷ்டர்களது சகவாசத்தால் ஏற்பட்டு மிகுதியும் இடம்பெற்ற கொடியபழக்கத்தை நிறுத்தி விடுதல் அவசியத்திலும் அவசியமாகும் "தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறி தின்னுயிர்நீக்கும்வினை" என்றார் தமிழ்மறை புகன்ற நல்லாசிரியர். அன்பு அன்புயெனச்சொல்லிக்கொள்வதாலும்வெளிமாயப்பகட்டாலும் அன்பு பெருகாது. அன்பைநமக்கு அடங்கிய ஜீவர்களிடமே முதன்மையாக காட்டுதல்வேண்டும். "அன்பின்வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு என்புதோல் போர்

த்த உடம்பு அதாவது எலும்பு கட்டுத்தோல் போர்த்திவைத்துள்ள பிணம்" அன்புடையார் எல்லாமுடையார் அன்பிலார் என்னுடையரேனுமிலர்" என்றார் நாயனார்.

## நாடிப்பிடித்தல் நன்னம்பிக்கையே.

இதுவரை சுமார் 90 ஊர் பிரயாணஞ் செய்து உதவிபெற்று வந்துகொண்டிருக்கிறோம். எங்களது திடமான எண்ணம் ஈஸ்பரனிருத்தல் மெய். அவரது ஆக்கினையாலே இவ்வுலகம் நடைபெறுகின்றது. பெரியார்களாகும் மஹான்கள் சுயநலங்கருதாது தாங்கள் அனுபவித்த அனுபவங்களை சாஸ்த்திரங்களாய் வெளிப்படுத்தியுள்ளார்கள். அவைகள் யாவும் உண்மையே ஒவ்வொரு காலத்தில் (ராம கிஷ்ண பரமாம்சரை போலொத்தார் உதித்திராவிடின் கல்கத்தா பம்பாய் முழுதும் கிறிஸ்து சமயமாய்விடும்) ஒவ்வொரு அவதார புருடர்கள் ஏற்பட்டு பழமையான ஜனதைன தர்மத்தை விடாது அதையொட்டி நன்மையான ரஸ்த்தாக்களில் ஜனங்களை நடத்தி வருகின்றனர். அதன் உண்மைகளை தென்தேயவாசிகளாகிய நாம் மிகுதியும் அறிந்து கொள்ளாததால் இவ்விதநிலையிலிருந்து வருகிறோம். உலகத்தில் எப்பொழுது ஓர்வித நல்லெண்ணங்கள் உதயமானதோ அதற்கு அனுகூலமான எண்ணங்களும் உண்டாகியே யிருக்கும் ஈஸ்பரனாகிய கடவுளை யார் கண்டவர்கள் அவர் இருக்கிறாரென்பதை எப்படி நம்புகிறோம் அபூர்வமாக சிற்சிலர் கண்டதாலும் உலக அனுமான பிரமாணங்களாலுந்தானே. நாம் அவரைக் காணவேண்டுமானால் எவ்வளவோமுயற்சிசெய்யவேண்டிய திருக்கின்றது. அதேபோல் நாம் அடையவேண்டிய முன்னேற்றமாகிய நலத்திற்கும் நன்னம்பிக்கை கொண்டு முயற்சி செய்தல் அவசியமே. சென்னையிலிருந்து பர்மாவுக்கு கப்பலேறுங்கால் நம்பித்தானே ஏறி வந்து சேருகிறோம். நம்மிடமே நம்பிக்கை கொள்ளாவிடின் எப்படி நம்பிக்கை உறுதியாகும் விஷயத்தை கேட்டவுடன் மறுபக்க காதின் வழியாக விட்டுவிடுவதில் யாதுபயன்? நாங்கள் யெடுத்துக்கொண்ட விஷயத்தில் ஒவ்வொருவரும் நம்பிக்கை கொண்டு ஒற்றுமைத்தால் எதுதான் முடியாது? சிருஷ்டி திதி சங்காரத்தை கண்டு பிடிப்பதாய் வேலைதொடங்கி சிருஷ்டியைக் கண்டுபிடித்த

ஸர் சகதீச சந்திர போசை எவ்வாறு நம்புகிறோம். இன்னம் எவ்வளவோ கண்டுபிடித்து வெளியிட்டிருக்கின்றனர். நம்தொழிலே நம்பிக்கையிலிருக்குதென்பதை எண்ணாது சகோதரர் விஷயத்தில் மட்டும்ஏன்மறந்து விடுகிறோம்? ஓர்பெரிய பர்வதாகாரமாகிய மலையைச்சிறு உளிகள்தான் இருந்தவிடம் தெரியாதுசமப்படுத்தி விடுகின்றன. நமது நிலங்களோ களர்நிலங்களல்ல (களர் நிலத்தில் விதைவிதைத்தால் முளைக்காது..தப்பி முளைத்தாலும் விளையாது) நல்லநிலங்களே. பூமியைப்பண்படுத்தி கல்லும் மண்ணும் தானியமுமுள்ள விதையை அறிவின் முயற்சியால் நம்பிக்கைகொண்டு தெளிக்க முயற்சி என்ற மழையின் உதவியால் முளை கிளம்பியிருக்கின்றன. அதை காத்து பக்கத்திலுண்டாகும் புல்பூண்டுகளை இதுசிறிது என்றெண்ணாது அவ்வப்பொழுதே நீக்கி பயிரைப் பெரிதாக்கி விருக்ஷமாக வளரவைத்தல் எல்லோரின் கடமையுமாகும். மாங்கொட்டை இடுதல் நல்லகனிவர்க்கந்தருமென நம்பியே. நாம்சாப்பிடாவிடினும் நம்புத்திரவர்க்கம் சாப்பிடுவார்கள், இன்புறுவர்கள் என்றெண்ணியே.

ஏதேதோ சொல்லி வருகிறேனென எண்ணாதீர்கள். கரும்பைச் சாப்பிட ஆரம்பிக்குங்கால் கரும்புருசி தெரியாதெனினும் வரவரத் தெரிந்துவிடும். கரும்பின் சுவையையான் நாவிலிருந்து சொல்லும் சக்தி தற்சமயம் பெற்றிருக்கவில்லையாயினும் ஒவ்வொரு நாளும் கருணையங்கடலாகிய பிரபுவின் அன்பால் பெற்று வருகிறேன் ஆதலால் மேன்பார்வையாய் கண்ணடிக்காது ஒவ்வொரு விஷயத்தையும் ஆழ்ந்துசிந்தியுங்கள். அமரிக்கையாய் பாருங்கள். இதற்கென சிலமணியை ஒதுக்குங்கள் இது எனது பலநாள் அறிவு அனுபவ உண்மை அரிய பொக்கிஷம்.

## முயற்சியால் முடியாதது யாதேனுமுளதோ?

நாம் இருந்தஇடம் விட்டுக்கிளம்பாதும் முன்னேற்றத்திற்கானமுயற்சியே செய்யாதும் இருந்துவிட்டோம். முயற்சிசெய்தால்தானே உயர்நிலைமை அடையலாம்." முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்." முயற்சி திருவினையாக்கும்." தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சிமெய்வருந்தக்கூலிதரும்." என்பதுபெரியார்களது ஆப்தவாக்கியங்கள் எதிலும் நம்பிக்கைகொண்ட

முயற்சியாயிருத்தல் நலம். /நம்பிக்கை என்பது உறுதிசெய்தல் அனேகர் பலவித முயற்சி செய்து பலநலங்களை அடைந்திருப்பதையும் அடைந்துவருவதையும் நாம் பார்க்கவில்லையா? அனேக கோடி ஜனங்களின் பிரதி நிதிகளை ஒன்று சேர்க்கும் படியான காங்கிரஸ் எவ்வளவு வருடங்களாக நடந்துவருகின்றது. அவை சிற்சிலர்களுடைய முயற்சியினாலே ஆரம்பிக்கப்பட்டு ஒவ்வொருவரும் யெடுத்துக்கொண்டுள்ள விடா முயற்சியினால் வரவர எவ்வளவோ பலமடைந்து பொதுவாக இந்தியா ஜனங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்கக்கூடிய பிரதிநிதிச் சங்கமாய்விட்டது. சிலமாதங்களுக்குமுன் பஞ்சாப்பைச்சேர்ந்த அழகியநகரமாகிய அமிர்தசரஸில் நடந்த 36-வது காங்கிரஸில் பலநடையுடை பாஷையுள்ள சுமார் 14000ம் பிரதி நிதிகள், ஒரேயெண்ணங்கொண்டு தேசநன்மைக்காக விஜயஞ்செய்து சகோதரத்வம் காட்டி ஒற்றுழைத்தனர்./

## குறிப்பிட்ட கொலையை குணமன்றேன விலக்கல்.

மகம்மதியர்களும் ஹிந்துக்களும் ஓர் தாய்வயிற்றிலுதித்த சகோதரர்களென அறிந்து உரிமை பாராட்டி தோளோடு தோள் தட்டி நாம் கொலை செய்யலாகாதென ஒதுக்கிவைத்திருப்பதும் அவர்களது சாஸ்திரப்படி பக்ரீத்பண்டிகையில் கொலைசெய்தல் அவசியமெனச் சொல்லியிருப்பதாய் வழக்கமாய் செய்துவந்ததுமாகிய பசுவதையை நிறுத்தும்படி அமிர்தசரஸ்முஸ்லீம்லீக்கிலும் கலிபத்மஹாநாட்டிலும் தீர்மானித்து அத்தீர்மானம் பலவிடங்களிலும் பரவி ஆதரிக்கப்படுகின்றது. சில வருடங்களுக்கு முன் ஒரு முஸ்லீம் நண்பர் முஸ்லீம் கான்பரன்ஸில் கோவதை செய்யக்கூடாதென கொண்டுவர விருந்த தீர்மானத்தை பலர் கேலி செய்ததற்காக அநேகமாய் தீர்மானம் ஆதரிக்கப்படமாட்டாதென வெண்ணி அவர் நிறுத்திக்கொண்டனர். அர்ராவில் பக்ரீத் பண்டிகையின்போதுநடந்த பசுவதையினால் பெரும் கலகம் மகம்மதியர்களுக்கும் இந்துக்களுக்கும் நடந்து கொலைக்களமானதை உத்தேசித்து 127 பெயர் ஹிந்துக்களை கவர்ன்மெண்டார் சிட்சித்தனர் தற்சமயம் அவர்களையும் விடுவிக்கவேண்டுமென மகம்மதிய சகோதரர் கேட்டுக்கொண்

டிருக்கின்றனர். ஹிந்துக்களது ராமநவமி முதலிய பண்டி கைகளில் மகம்மதியர்களும், மகம்மதியரது பக்ரீத் பண்டிகை முதலியவைகளில் இந்துக்களும் கலந்துகொள்ளுகின்றனர். நம் தாயைப்போலொத்ததும் அமிர்தமாகிய பாலைத் தந்து சிசுக்களையும் உலகத்தாரையும் வளர்க்குந் தன்மையுடைய தும் விவசாயத்துக்கு அவசியம் வேண்டிய மாட்டினங்களை விர்த்தி செய்ய உதவக்கூடியதும் பசுவாகும். அதன் உண்மை களை மகம்மதிய சகோதரர், நாளடைவில் அறிந்துகொண்டனர் அறிந்ததோடு கலிபா ஸ்தானத்துக்கு கஷ்ட நிலை வந்துள்ள இச்சமயத்தில் ஹிந்துக்களுடன் நட்பைவிர்த்தி செய்துகொள் ளும்மார்க்கம் பசுவதையை விலக்குவதுதானெனவும் கைக்கொண் டுவிட்டனர். பசுவதையை நிறுத்திவிட்டதற்காக ஹிந்துக்கள் நன்றி பாராட்டுதல் அவசியமென வெண்ணி, இரங்கோனில் தேசாபிமானச் சிங்கமாகும். டாக்டர் மேத்தா தலைமையில் ஓர் பெரிய கூட்டம் 25-1-20. ஞாயிற்றுக்கிழமை மகம்மதியர் அசோசியேஷனில் கூட்டப்பட்டது. அதில் பல ஜாதியினரும் பாஷைக்காரரும் சென்று தங்கள் தங்கள் அபிப்பிராயத்தை தெரிவித்தன ரெனவும் சுமார் 300 கடைகளுக்குமேல் வைத்து மிகப்பிரபலமாய் கொடுக்கல் வாங்கல் செய்துவரும் நம்மவர் களுக்காக தாமரைத்தடாகத்தில் அத்தி பூத்தமாதிரி தேச நண்பர் ஒருவர் வந்திருந்தாரெனவும் அவரைப்பேசும்படி டாக்டர் ராவ் கேட்டுக்கொள்ள அவராகிய ஸ்ரீமாந் பிருநாசித ஏஜண்டு **சோம சுந்தரம் செட்டியாரவர்கள்** நம்தாய்பாஷையில் பசுவதையை விலக்கியதின் அவசியத்தை நன்கு விளக்கிக்காட்டி விலக்கிய தற்கு நன்றி பாராட்டி இப்பொழுது பயந்தபாவனையில் மகம்மதி யர் மசூதி முன் நிப்பாட்டும் மேளத்தை இனிசகோதரர் என்ற முறையில் பயமில்லாது நிப்பாட்டுதல் அவசியமென வற்புறுத்தி னாகளெனவும் கேள்வியுற்றேன். இது ராஜாங்க விஷயமல்ல நம் ஹிந்து சமயத்தின் முதன்மையான விஷயமாகும்.

**பயங்கொள்ளிகள் பலிஷ்டர்களானதும் பயமில்லாதார் பதுங்குதலும்.**

கேணிக்குள் சதாவஸிக்கும் தவளைகள் சமுத்திரதவளை யைக்கண்டால் பயந்து இடம்பார்த்து ஒளிந்துகொள்ளவேண்

டியதே. பயங்கொள்ளி பயங்கொள்ளி எனும் வங்காளிகள் பயமில்லாத தீரபுருடராய்விட்டனர். எப்போதும் பயமில்லாத நாம் பயங்கரன் என்ற துணைவனைக்கைக்கொண்டு விட்டோம். தேச நன்மையான காரியம் பொதுநன்மையான காரியத்தை ஒதுக்கிக் கொண்டு போலிச்சுயநலப்பற்றுச்கொண்டு வருகிறோம். நம்காலத்திலாவது இதற்குவிமோசனம் ஏற்பட்டால்தானே நலம். ஆகாய விமானமூலம் போக்குவரத்தும் வியாயரபாரமும் செய்யக்கூடிய இக்காலமாகும் நற்காலத்தில்நாம் மணிக்கு ½மயில் கடக்குப் புடக்கென்று ராகம்பாடிச்செல்லும்'கட்டைவண்டியில் ஏறிப்பழுதுள்ள ரோட்டில்ச் செல்லுதல் பொருத்தமாகுமா? ஆகாதாகாது ஒருபோதுமாகாது "உலகத்தோடொட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார் அறிகிலாதார்." "ஒத்தறிவான் உயிர்வாழ்வான் மற்றயான் செத்தாருள் வைக்கப்படும்" என்பது எக்காலத்துக்கும் எச்சமயத்துக்கும் பொருத்தமுள்ள நாயனார் வாக்காகும்.

## காலசக்கிரச் சுழற்சியின் கனவேகம்.

க்ஷத்திரியரெனும் நாடார்களெல்லாம் கல்வியில் முன்னேற்றமடைந்து கொண்டுவருவதால் சகோதரர் என்றபான்மையில் இனி எந்தகோவில்களுள்ளும் தாராளமாய்ச் செல்லலாமெனவும் அதை ஒவ்வொருவரும் கவனித்தல் வேண்டுமெனவும் மதுரை இராமனுதபுரம் கான்பரன்ஸில் தீர்மானம் செய்துள்ளார்கள். தாழ்ந்தநிலையிலுள்ள பறையர் பள்ளர் முதலியனோர் இந்தியாவில் ஆறில் ஓர் பாகஸ்தராயிருப்பதால் அவர்களைமுன்னேற்றமடையும்படி செய்துவைக்காவிடின் இந்தியர்களை பிறர் நகைத்து நமக்குள்ளே கட்சியை வலுப்படுத்தவும் அன்னிய சமயத்தில் சேர்த்துக்கொள்ளவும் ஏதுவாகுமென எண்ணி இந்துக்களுள்பலர் பிரசாரவேலை செய்துகொண்டிருக்கின்றனர். அன்னோரின் பெயர் ஆதி திராவிடரென்கின்றனர். சக்கிலியர் மறவர் லாயர் லாயர் குமாஸ்தா கர்னம் மணியம் தோட்டி வேளாளர் முதலியார்கள் கம்மவர் ரெட்டிமார் தோட்டிகள் ஆதி திராவிடர் தபால் சேவகர் ஜாவுகார் வியாபாரிகள் அவர்களின் குமஸ்த்தாக்கள் காப்பி ஒட்டல் போஜன ஒட்டல் பக்ஷண ஒட்டல் முதலிய ஒட்டல்காரர் ஆகிய ஒவ்வொருவர்களும் தங்கள் தங்கள் குறைகளை

அயல்தேச வாஸிகள் நமக்குக் காட்டித்தந்தது அவர்கள் பழக்கத்தை ஒட்டியே நாம் தெரிந்துகொண்டு வருகிறோ மென்ற எண்ணம்மாறி ஆதிகாலத்திலிருந்து நாகநாட்டார் நாகரீக முடையாரென்பதை தெரிந்துகொண்டு நம்தேயம் சமயம் பாஷை ஜாதி முதலியவை எவ்வித நிலையிலிருக்கிறதோ அவ்வித நிலையையே நாம் அடைவோ மென எண்ணி பலவிதத்திலும் திருத்திக் கொள்ள முற்பட்டிருக்கிறோம். நம் தேசமாதாவை ஆதரிக்காது இதுவரை புறக்கணித்து இருந்து விட்டோம். அப்பெருமை வாய்ந்த தாயினது ஆதரவைப்பெற இது வரை நாம் முயற்சிக்கவே இல்லை. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்றபடி அன்னையினாலே தான் பிதா வென்பவர் யாவரென அறியவேணும். அவள்தான் சுமந்து பெற்றெடுத்தவள் நம்முன்னேற்றத்தில் அருமைத்தாய்க்கு விருப்பம் ரெம்பவுண்டு தாயென்பவள் சாட்சாது ஈஸ்வரியாகும் பாரதமாதாவே பாரதம் என்பது பரத தேயமென்ற நாவலந்தீவு. எனவும் மாதா என்பது கருணைவாய்ந்த தாய் எனவும் பாரதமாகும் உலகத்தை ரக்ஷிக்கும்தாய் எனவும் பெயர் பெறும் இதுவரை அயல்தேசத்தாரால் போற்றப்பட்டு வருகிறாள். அவள் தரித்துள்ள ஆடைகளும் அப்படியே நாம் கொண்ட புருடனைவிட்டு கூடவந்த புருடனைக்கைக்கொண்ட மாதிரி அயல்தேசப்பழக்க வழக்கங்களை மிகுதியாய் கைக்கொண்டதோடு அவர்களால் தயார்செய்யப்படும் பொருள்களையே மிகுதியும் உபயோகித்து வருகிறோம் தாயின் சாபம் நமக்கு ஏற்பட்டுளது அதை இந்தியசகோதரர்களுக்கு தெரிவித்து பழயமார்க்கத்தில் பழுதுபட்டுள்ள சிலவிஷயங்களைத்திருத்தி நன்மார்க்கத்தில் நடக்கவேண்டும்.

### எம் கூட்டத்தாரின் பிரசாரவேலை.

எங்கள் பிரயாணத்தில் முக்கியமான விஷயங்களை வெளியிட்டு மீதியுள்ள பலவிஷயங்களை சிறுகச் சிறுக வெளியிடுவோம். இதுவரை கீழ்கண்ட துண்டுப்பிரசுரங்கள் எங்களால் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

(1) நாட்டுக்கோட்டை நகரவைசியர்களின் சீர்திருத்த வேண்டுகோள்,

(2) சீர்திருத்த விளக்கம்.

(3) நமது கடமை.

(4) இரங்கோன் முகல்ஸ்ட்ரீட்டு விஷக்கிரிமியின் காளிங்க நிர்த்தனம்.

(5) சங்கத்தால் ஏற்படும் சக்தி அளவில.

(6) இரங்கோன் நகர வைசிய அடுத்தாள்க்களின் இயக்கம்.

(7) மலாய், ஸ்டேட்ஸ் நாடாகிய பினங்கு சிங்கப்பூரில் வஸிக்கும் ஹிந்துக்களும் எக்சேஞ் என்ற பெரிய கொள்ளிவாய்ப்பூதமும்.

(8) நாட்டுக்கோட்டை நகரவைசிய சமுகமே, தலைக்குமேல் தண்ணீர் வந்துவிட்டது, அறிந்தேனும் எழும்ப லாகாதா?

(9) இயக்கம் அல்லது முயற்சி எனும் கிளர்ச்சி.

(10) பர்மா நாட்டுக்கோட்டை நகரவைசிய சிகாமணி களுக்கோர் விஞ்ஞாபனம் (அடுத்தாள்க்கள் செய்யும் விஷம்பம்.)

(11) ராமாயணம் படிப்பதின் பிரயோஜனமும் அதன் சிக்கனமும்.

(12) ஒற்றுமை முற்பாதி.

இத்துடன் நகரத்தார்களின் இருப்பிடம் சென்று விஷயத்தைப் பரப்புதலும், துண்டுப்பிரசுரம் பத்திரிக்கைகளால் ஏற்படும் பிரயோஜனத்தைத் தெரிவித்தலும், அவரவர்கள் உதவும் தனங்கள் குறைவெனினும் மகிழ்வுடன் பெறலும், அவரவர்களின் அபிப்பிராயத்தையும் அவாவையும் அறிந்து கொள்ளலும், அந்தந்த இடங்களில் நம்மவர்கள் நடத்தி வரும் தொழில் முறைகளையும் வருவாயையும் அறிந்து கொண்டு வருதலும் ஒவ்வொரு இடங்களிலும் உள்ள ஆலயங்களைத் தரிசித்து வருதலுமே எங்கள் கோரிக்கையும் நோக்கமுமாகும். நாங்கள் கைக்கொண்ட கைங்கரியத்திற்கு சாஸ்தியான பொருள்களைத்தந்து உதவாவிடினும் நாங்கள் கைக்கொண்ட கைங்கரியம் தற்காலத்துக்கு அவசியமென ஆமோதித்து சிற்சிலர் அடுத்த

ஊர்களுக்கும் எங்களுடன் வந்து எங்களது தேச சேவையில் பங்குபெற்று வருகின்றனர். எங்களது பிரயாணத்தின் முன்பதாகவும் பின்பும்பெரிய சிறிய யாசகங்கள் நடந்துகொண்டேதானிருக்கன்றன. "வறியார்க் கொன்றீவதே ஈகை" என்றபடி முழுதும் பின்பற்றாவிடினும் இரப்பவர்களுக்கு இல்லை என்னாது கொடுக்கும் கொடையாளர்களே நாம். 10000ம் ரூ. ஒருவருக்கு இருப்பின் நம்சொந்தத்தில் சொற்பமாய் என்ன தர்மஞ் செய்வோமென எண்ணும் இயற்கை அறிவுடையோம் எதுஎது நலமென ஒருவர்பின்பற்றினார்களோ அதையே அனைவரும்பின்பற்ற எண்ணங்கொள்வோம். பாத்திர மறிந்து பிச்சையிடுதல் என்ற வழக்கத்தையும் குறிப்பறிந்து ஈதலையும் இனித்தான் தெரிந்து கொள்ள வேணும். நம் நாடுகளில் சிரார்த்தம் சவுண்டி சாந்தி முதலியவைகளுக்கு லெட்டர் கொடுக்கும் மாதிரி இப்பர்மாவிலும் அநேகயாசகர் முன் பின்னறியாதவர்களுக்கு லெட்டர் எழுதிக் கொடுத்து தாங்கள் பெருந்தொகை கடையிலிருந்து கொடுப்பதுடன் சொந்தத்திலும் கொடுத்து வருகின்றனர் எவர்களிடமும் சொல்லளவிலும் வெளிவேடத்திலும் ஆர்ப்பாட்டத்திலும் நம்பிவிடலாகாது. வைத்தியம் மாந்தரீகம் ஜோஷியம் தெரியுமெனத்தான் அநேகர் சொல்லுவார்கள். இப்படி நம்மவர்களின் பொருள்களைப்பல போலி மனிதர்கள்நாள்தோறும் அபகரித்துச் செல்வதைப்பார்க்கஎங்களுக்கே மனம்பதறுகின்றது. எதற்காகவெனில் இவ்வளவு அறியாமையாளர்களும் உலகத்தில் இக்காலத்திலும் வசிக்கிறார்களே யெனத்தான். நம்முயற்சியை அறிந்து ஈஸ்பரன் ஏதோ சிலபொருள்களை நம்மிடம் தந்துள்ளார். அதைநாம் நன்மையான மார்க்கத்தில் செலவிடின் பொருள் மென்மேலும் விர்த்தியடையும். பல்லக்கில் ஏறிச்செல்பவரும் தூக்கிச் செல்பவரும் மனிதர்களே. அவர்களைப்பார்த்து நாம் பல்லக்கேறிச் செல்வாரை பூர்வத்தில் புண்ணியஞ்செய்தவர்களெனக் குறிப்பிடுகிறோம். அப்படியானால் தூக்கிச்செல்பவர் பாவகிர்த்தியஞ் செய்தவர்தானே. மச்சம் பிடித்து ஜீவனஞ் செய்பவர்களிடமும் குடிகாரரிடமும் போலியாசர்களிடமும் பொருள் சென்றால் துன்மார்க்கத்தில் செலவிட தூண்டுகோலாவதுடன் துன்மார்க்கம் விர்த்தியாகி நம்

பொருளுக்கும் பயன் ஏற்படாது, "வாதுக்குச் சண்டைக்குப் போவர் வருவர் வழக்குரைப்பர் தீதுக்குத் தவியும் செய்திடுவர் இவர்தேடி மாதுக்களித்து மயங்கிடுவர் இனிவாழு மட்டும் ஏதுக்கிவர் பிறந்தார் இறைவாகச்சி ஏகம்பனே" என்ற நம்குல மணியாகிய பட்டணத்தடிகள் வாக்கியம் நன்கு கவனிக்கத்தக்க தாகும். நன்மார்க்க மென்பது மாங்கனியெனவும் துன்மார்க்க மென்பது எட்டிக்காய் யெனவும் மல்லிகைபுஷ்பம் எருக்கலைபூ வெனவும் சொல்லலாகும். துன்மார்க்கத்தை விர்த்திசெய்ய உபகரிப்பின் அவதாரமாகப் போகும் குரு நாதரை வரவேற்கவும் அவரது அருள்பெற்ற அடியார்களது ஆசிர்வாதத்தைப் பெறவும் ஒருவிதத்திலும் இயலா. அதை அன் றன்று தெரிவிப்பதற்காகவே தேவராச சபையில் தெரிவிக்க (விண்ணப்பம்) நம்மைஅழைப்பதுவே கோவில்களில் காலாகா லத்தில் கூப்பிடும் மணிச்சப்தங்கள். காசு வீணில் செலவிடார். உசிதமானதில் கன திரவியங்கள் விடுவார் என்பதே நம்ஜாதித் தர்மமாகும் அதை அநேக விஷயங்களில் கைநழுவவிட்டுவிட் டோம். அழுத்தம் காட்டக்கூடாததில் கனஅழுத்தம் காட்டுகி றோம். ஒவ்வொரு இடங்களிலும் முந்தியெழுதுதல் பிந்தி யெழுதுதலென்ற வழக்கம் பெயர்பெற்று நடந்துவருகின்றது. அதில் தோதுக்குக் கொடுப்பதா விஷயத்துக்கு கொடுப்பதா என்ற கேள்வி எழுகின்றது. இயன்றதை பாத்திரமறிந்து கொடுப்பதை விட்டு அங்கு இங்கு எனல் எதற்காக? வாதக்கோன் நாளையென்றான் வையக்கோன் பின்னே யென்றான் ஏதக்கோன் யாதேனுமில்லை யென்றான், வாதக்கோன் சொன்னதிலும் வையக் கோன் சொன்னதிலும் ஏதக்கோன் சொன்னதே இனிது என்ற தைக்கவனியாது கையைக்காட்டுதல் பெரும் அசம்பாவித மாகும். பல ஏழைகளது அனுகூலத்துக்காகவே சர்வேஸ்பரன் பொருளாளர்களிடம் பொருளைக்கொடுத்து அவர்கள் எப்படிப் செலவிடுகிறார்களென அறிகின்றனர். துன்மார்க்கத்தில் பொரு ளாளர் செலவிடின் பொருள்தந்தவர் வேறொருவருக்கு பொரு ளைக் கொடுக்கும்படி அல்லது அபகரித்துகொண்டு செல்லும்

படி செய்கின்றனர். நம்மிடம் பொருள்தந்திருப்பது பரீட்சைக்காகவே இதன் உண்மைகளை ஒவ்வொருவரும் அறிந்து கொள்ளவேண்டும்.

## ஆலயச் செலவை அடக்கிச் செய்தல்

நாம் பிழைப்புக்காக வந்த ஒவ்வொரு ஊர்கள் தோரும் தேவாலயம் பொருள், ஆபரணம், நிலம், முதலியன அபரிமிதமாக தேடிவைத்துள்ளோம். எல்லாம்சேர்த்தால் 100 குடும்பாலய மாகிவிடும். ஒவ்வொரு வீட்டிலும் மேல்வீடுகளிலும் சுவாமிகள் படம் வைத்திருப்பதுடன் வீட்டுக்குள்ளும் சமயல் கட்டுகளிலும் படங்கள்வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை ஆசாரமுள்ள ஒரு இடத்தில்வைத்துபலர்சென்று வணங்குதலேநலம் ஆலயங்களில் ஏற்படும் விசேடங்களில் ஏலம்நடக்கின்றன. ஒருசாமான் எடுப்பதாக வெண்ணியாவது பொருள் கொடுக்கட்டும் என எண்ணிப்போலும் போட்டி உண்டாக்கி பணம் பெறுதல் ஏனோ? அனேகசாமர்த்தியசாலிகள் 40-30 உடனும் தயாளகுணாளர்களென்பவர்கள் 300-400லும் அகப்பட்டுகொள்கின்றனர். அது அவசியமில்லாத சாமர்த்தியமானவை. விசேடதினங்களில் போஜனம்செய்வதில் அதிகம் செலவிடுகின்றனர்களே தவிர விதரணையுடன் செலவிட்டு பலர்களுக்கும் பிரயோஜனப்படுத்துவதாய்த் தெரியவில்லை 4ல் 3 வியர்த்தம். போஜனவிஷயத்தில் பணம் செலவிடுவதை சிலர்களிடமிருந்து தெரிந்துகொண்டு செலவிடுவார்களானால் நன்கு பயன்பெறும். மகமை சேரும் பெருந்தனங்களை கல்வியிலும் கைத்தொழிலிலும் பொதுநலத்திலும் செலவுசெய்துவந்தால் எவ்வளவோ நன்மையுண்டு. க்ஷத்திரியர்களெனும் நாடார்கள் செய்துவருவதைத்தெரிந்துகொண்டேனும் நம்மவர்பின் பற்றுவார்களாக அவசவர்கள் நாமநக்ஷத்திரம் சொல்லி அர்ச்சனை செய்யச்சொல்வதைகாட்டிலும் நகரத்தார் பேராலும் ஈஸ்வரன்பேராலும் சொல்லி பொதுநலத்தை விரும்பி அர்ச்சித்தல்தான் நலமாகும். நாம் வணங்கி வரும் ஸ்ரீ சண்முகதேவரை, பிராமணர்களையோ அல்லது சைவர்களையோ கொண்டு ஆசார அனுஷ்டானத்துடன் பூசைநடத்தி வரச்செய்தல் எவ்வளவோ நலம். ஆசாரம் சிறிதேனும் இல்லாதவர்களையும் அனாசாரத்தைக் கைக்கொண்டவர்களை

யும் அர்த்தசாமம் ஆகுமுன்மாமிசம் சாப்பிட்டுவிட்டு கையையும் துடைக்காமல் விக்கிரகத்தின் மேல் கைபோட்டும் விபூதியில் கை போட்டும் தீபாராதனை செய்துவருபவர்களையும் கொண்டு பூசை செய்து வரச்செய்வதால் எவ்வளவோ கெடுதியுண்டு. மாமிசம் சாப்பிடுவதற்கும் பூசைசெய்வதற்கும் யாதென எண்ண வேண்டாம் அவ்வாறே மாந்தளை பசுமந்தான் தோங்குவா சிக்கோன். இன்னும் சில ஊர்களில் ஏற்பட்டு நடைபெற்று வருகின்றன அங்குராசிதான் அனுஷ்டானத்தையும் நாம்சாப்பி டுவதையும் யெண்ணாது பலர்களும் கைக்கொண்டு நடத்த முன்வரவேணுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன். நாம் கோவில் விஷயத்தில் பர்மாவில் செய்து வரும் பெரும் டாம்பீகச்செலவினங்களை பல நாள்ப் பார்த்து பர்மாக் கவர்ன்மெண்டார், இனி எந்தத் தேவாலய சம் பந்தமான விஷயங்களையும் கவர்ன்மெண்டு அறிய விரு ம்பும் சமயம் கணக்குதயார் செய்து ஒப்புவிக்கவேண்டுமென பாரீயன் டிப்டி கமிஷனர், நகரத்தார்களிடம் தெரிவித்து அவ் வாறே சட்டம் செய்யப் போகின்றனர். அது நமக்கு நல்ல காலந் தான் சரியானவழிகளில் பொதுப்பணங்களை செலவிடுகிறார்களா வென அறிந்துகொள்ளத்தான் பொதுப்பணம் செலவிடுவதற்கும் கவர்மெண்டார் சரட்டிப்பிக்கட் வேண்டப்படுகின்றன. இதைஉத் சித்தே சென்னையில் தர்மபரிபாலனசங்கம் ஸ்தாபிக்கப்பட் டுள்ளது அதில் நம்மவர்களும் 6-7 பெயர் மெம்பராய் சேர்ந்துள் ளார்கள். நாம்நன்மைக்கென யெண்ணிச் செய்வதெல்லாம் நம்மை அடக்கும் அடக்குமுறை போல் வந்து நேர்ந்து கொள்ளுகின் றன. நாம் கொஞ்ச நாள் வர்த்தக நிமித்தம் இங்கு வசித்துவரு பவர்கள். ஒருவருடத்துக்கு செட்டாக ஆலயச் செலவுக்கு எவ்வளவு வேண்டியதோ அவ்வளவு மட்டும் மகமை யெழுதிக் கொள்ளலாம். அதற்கு வேண்டிய நகைகளை மேலும் மேலும் செய்தல் அவசியமில்லாதது, அனுவஸ்யமானதுமாகும். நம்குல குருவாகும் ஸ்ரீ கந்தவேள் நகைசெய்யாததற்காகவெல்லாம் கோபித்துக் கொள்ள மாட்டார். கடவுள் எங்கும் வசிப்பவர் அவ ரை நாம் கூலியாளைப் போல் கடலில் வரும் நம் சரக்கை அபாய மில்லாது கொண்டுவந்து சேர்த்தால் உமக்கு கிரீடம் செய்துவைக்

கிறேமெனக் கேட்டுக்கொள்கிறேம். நம்மை உண்டாக்கியவரை பணத்தால் ஏமாற்றியோ, மகிழும் படியோ செய்ய எண்ணினல் நம்மை அவர் யெப்படி எண்ணுவார்-கடவுளை அன்பென்ற பாசத்தால் வசப்படுத்தலாமே தவிர மற்ற ஒன்றினலும் வசப்படுத்த முடியாது அப்படி எண்ணுதல் அறியாமையும் சபலபுத்தியுமேயாகும். உடையவர்க்கு (மூலவிக்கிரகத்துக்கு) உழக்குப்பஞ்சாமிர்தம் அல்லது ஈரப்பசையே சிறிதேனும் இல்லை ஆலய மெல்லாம். அபிஷேகமாம் என்றபடியும் வயற்றுக்கு வேண்டும் அன்னத்துக்குப் பெற்றதாய் திண்டாடுகிருள் தம்பி (அதாவது மகன்) ராமேஸ்பரத்தில் கேட்டதெல்லாம் கொடுப்பதாய் அன்னக்கொடி கட்டி நடத்திவருகின்ருனென்பதால் யாது பயன்? தனக்குக் கண்டல்லவா தானம். நம் நாட்டின் பாஷையோ மிகுதியாக ஆதரிப்பாரில்லாது அனுதரவாயிருக்கின்றது. ஆலயம் கட்டும் நாளிலிருந்து இந்து சமயம் குறைந்து கொண்டுதான் வருகின்றது; அமுங்கிப் போயிருக்கின்றது. நம் ஜாதியினரோ வர வரக் குறைந்து கொண்டேவருகின்றனர். அவ்வக்காலத்தில் யேற்படும் குறைவான தர்மங்களை அறிந்து செய்தால் யெவ்வளவொ நலமுண்டு. தண்ணீருக்கு கஷ்டமடையும் இடத்தில் தண்ணீர் கேணி பல வெட்டியவர்களுக்கும் உபயோகமாகும்படி உதவி செய்யாது சத்திரங்களைக் கட்டி வைப்பதால் பயனுண்டோ உண்டெனினும் சிறந்ததாகுமா? "பொருள் கருவிகாலம் வினையிடனேடைய்ந்தும் இருள்தீர யெண்ணிச் செயல்"—என்பது சுருதி வாக்கியம்.

### வேற்றுமை விருக்ஷம் வேரூடி விட்டது.

நம்மவர்கள் வசிக்கும் ஒவ்வொரு இடங்களிலும் வேற்றுமை பலப்பட்டுக் கொண்டுவருகின்றது. எதினல் அனைவரும் ஒரே தொழிலைச் செய்து வருவதாலும் ஒருவர் கொடுத்த ஆசாமிகளிடமே இன்னேருவர் கொடுப்பதாலும் ஒருவர் கொடுத்த வட்டிக்கு இன்னேருவர் குறையக் கொடுத்து வருவதாலுமே பகல் 12 மணி நடு வெய்யலானுலும் போஜனமும் செய்யாது 1—1-4-0 சாஸ்த்தி 1-8-0 வட்டிக்கு ஆசைப்பட்டு எல்லாம் ரொக்கமாகவேணுமானுலும் கொடை நடையனில்லாதும் தூக்கிச் சென்று பணம் வாங்கிக் கொள்ளுகிறவன் வீட்டில்

கொடுத்து விட்டு வருகிறோம். வந்தவுடன் ஸ்நானஞ் செய்வதற்காக தலையில் தண்ணீரை விடுகிறோம் மூளையெவ்வாறு இருக்குமென்பதை தெரியாதவர்களும் தெரிந்து (நெய்யை வெய்யலில் வைத்து உறையும் படி செய்யவேணுமானால் யெவ்வளவு நேரம் செல்ல வேண்டிய திருக்கின்றது) கொள்ளுதல் அவசியம் சில இடங்களில் சினர் பர்மியர் கலியன்காரர் தவுந்துக்காரர் சூரத்தியர் பார்ஸியர் வீடுகளுக்கு அடிக்கடி சென்று கடன் வாங்கிக் கொள் யெனவும் தொந்தரவு செய்கிறோம். நாம் பெறுதல் பெருங் கடன் கொடுத்தல் சிறு சிறு கடன். கடன் வாங்கி கடன் கொடுத்தவர்கதை யாவரும் அறிவர். 10000 ரூபாய் கையிலுள்ள ஒருவர் ஒரு லட்சத்துக்கு மேல்ப்பட்ட தொழில் செய்வதானல் மீதி அனைவற்றும் கடன்தானே. கடன் வாங்குவதற்கு ஒவ்வொருவர் தயவையும் யெதிர்பார்க்க வேண்டியதிருக்கின்றது. பெருந்தனவந்தர்கள் கடைகளிலுள்ள எம்மவர்களில் சிலர் மற்ற அன்னியர்களை முழுதும் நம்பும் மாதிரி சுயமரபினரை நம்பாதிருக்கின்றனர். அவை காலத்துக்கும் முன்னேற்றத்துக்கும் பரோபகாரத்துக்கும் ஏற்றதல்ல. உள்ளதை வைத்துக்கொண்டு நம் முன்னோர் பரம்பரையாகச் செய்து வந்ததாகிய பண்டமாற்று, வியாபாரம் கைத்தொழில்களைச் செய்துவரலாகாதா? ஒரு ஊரிலுள்ள பதின்மர் நாலுவித தொழிலைச் செய்து வந்தால் எவ்வளவோ ஒற்றுமை விர்த்தி யடைவதுடன் சாஸ்த்தியான வருவாயுமுண்டு. எவர்களானலும் ஒரு தொழிலையும் ஒரே மனிதனையும் நம்பி இருக்கலாகாது. நம் சுய வாசஸ்தலங்களில் எவ்வளவோ தூரதேயங்களிலிருந்து ஆட்கள்வந்து தொழில் செய்து சம்பாதிக்கின்றனர். நாம் அத்தொழிலை ஏன் செய்யலாகாது? நாம் ஜெனன தேசத்தில் சாப்பிட்டுவிட்டு திண்ணைகள் பார்த்து படுத்து தூங்குவதும் பல விஷயங்களைப் பற்றி ஆரவாரமாய்ப் பேசுவதும் சூதாட்டங்களாடுவதும் தேர்த்திரு விளாக்களுக்கு வண்டி விரட்டி தமாஷ் செய்து வருவதும் ஒய்ந்து, அங்கேயும் வியாபாரஞ் செய்தால் இருஇடங்களிலும் வருவாய் கிடைக்க வழிஏற்படுவதுடன் நம் அறிவும் வாழ்நாளும் பயன் பெறுவதற்கும் புத்திர வர்க்கத்தார் பின்பற்றுவதற்கும் ஏதுவாகும். பலர்களும் நம்மைப் போற்றி ஏற்றுவார்கள்

வதை அறிந்தும் அறியாதுநாம் பர்மாதேயத்திலிருந்து பொருள்களை அபகரித்துக்கொண்டு போகிறோமெனப்பலர் தவறுதலான அபிப்பிராயங் கொண்டிருக்கின்றனர். எதினுல் நியாயத்தையெடுத்துப் பேசிவெளியிடுந்தன்மையில்லாததால்தான் பொருளாளருக்கு பொருளைக் கடன் கொடுக்கிறோமே தவிர பொருளில்லாதாருக்கு கொடுக்கவில்லை. அதில் பரோபகாரத்துக்கும் இடமில்லை. 30-40 வருடங்களுக்குள்த்தான் வட்டித்தொழில் நம்மவர்களிடம் அபிவிர்த்தி யானதாய்த் தெரிகிறது. பர்மாவுக்கு வந்து விறகு வெட்டியும் தண்ணீர் தூக்கியும் பிழைத்த சீனர்கள் எவ்வளவோ மேன்னிலை மையிலிருந்து வருவதுடன் பர்மாவில் சந்ததி அபிவிர்த்திசெய்து பக்கபலம் சேர்த்துவிட்டனர். மகம்மதியர்களில் சிலர்இங்கு வரும்போது வழிச் செலவுக்கு கடன் பெற்றுவந்து பெரும் பொருளாளராகிவிட்டனர். சூரத்துக்காரர் பம்பாய்க்காரர்கள் முதலிவர்கள் சொற்பப் பொருளுடன் நம்மிடம் கடன் பெற்று பெரும் செல்வவந்தர்களாய்விட்டனர். எல்லாருக்கும் கடன் கொடுக்கும் தொழிலை நடத்திவரும் நாமோ ஆக குறைந்த வருவாயைப் பெற்று வட்டி வாங்கிப் பிழைப்பவர்களெனச் சொல்லும் இழிவான பெயரையும் அவாவோடு ஏற்று யோக்கியப் பொருப்பு பலவகித்து கொடுத்த பணம் வரும்வரை பக்குப் பக்கென்று மனந்துடித்துடித்துக்கொண்டும் வாங்கினவன் வீட்டுக்கு அடிக்கடி போய் பார்த்துக்கொண்டும் சாமி கும்பிடும் போது கடன் வாங்கியவனுக்கு லாபம் கிடைத்து நமக்குத்தர வேண்டுமென யெண்ணிக் கும்பிடுகிறோம். 1—1-8-0-க்கு ஆசைப்பட்டு 100 ரூபாயை நம்பிக்கொடுக்கிறோம் அவர்களுக்கு லாபம் கிடைப்பின் நமக்கு பணம் வந்துவிடும் நஷ்டம்வரின் நமது நஷ்டமே இன்சால்வெண்டோ சுலபமான வழி நம் கேஸ்களுக்காகத்தான் பர்மாவில் சாஸ்த்திபான கோர்ட்டுகள் வேண்டப்படுகின்றன பர்மா அனேகமாய் கலப்பு மிகுதியாய்விட்டது. கலப்பு மிகுதி ஆக ஆக படிப்பினை சாஸ்த்திதான் படிப்பினை சாஸ்த்தியானுல் நாம் மிகுதியாய் வட்டித்தொழிலில் சம்பாதிக்க வழியில்லை. பேங்குக்காரர் மாதிரி நம்மவரிற் சிற்சில பொருளாளர் ஒன்று சேர்ந்து பேங்கு ஏற்படுத்தி தங்கள் சொந்த

ஜாதியினர்களையே வைத்து நடத்திப் பழக்கிவருவார்களானல் பயனுண்டாவதுடன் புகழும், கீர்த்தியுமுண்டு,

## மூன்று வருட மூமேந்தரச்ஜெயில்க் கூடம்.

ஒவ்வொருவரும் வந்த வந்த இடத்தில் பக்கத்துணை சேர்த்துவிட்டனர். நாம் உள்ளதையும் விர்த்தி செய்யாது அந்த மான் தீவுமாதிரி 3 வருடம் இங்கே இருந்து காலத்தைக் கழிக்கிறோம். அப்படிக் கழிக்கிற நாம் இந்திரியத்தைச் செலவிடாதிருக்கிறோமா? அனேகமாய் அதுவுமில்லை. பர்மாவில் சுமார் 200 குடும்பங்கள்வரை யுண்டென மதிப்பிடப்படுகின்றது. பர்மியப் பெண்களோ பிள்ளை காய்க்கும் மரங்கள். நமக்கு ஒரு விதத்தில் சம்பந்தமுள்ளதையும் வெளிப்படையாக இல்லை யென்று சொல்லி வருகிறோம். முன் இங்கே 3 வருடமும் சுயவாசஸ்தலத்தில் 3 வருடமுமிருப்பது இப்பொழுது ஏற்பட்டுள்ள குடும்பச் செலவு ஜாஸ்த்தியினல் ஒரு வருடம் இரண்டு வருடம் வரை ஜெனன தேயத்தில் பெண்டிருடன் சேர்ந்து இருத்தல் பெரும் பிரயாசையாயிருக்கிறது. இரண்டுவருடமாக்கினல் மிகநலம், சிலமுதலாளிகள் இடையில் ஊருக்குப்போய்வர. அனுமதிகொடுத்தல்போலப்பலரும் அனுஷ்டிக்கலாம், அத்துடன் சூரத்துக்காரர் மகம்மதியர் பார்ஸிக்காரர் வங்காளிகளைப் போல் நாமும் பெண்களை பர்மா தேயம் போன்ற பல விடங்களுக்கு கூட்டிச் செல்வதால் எவ்வளவோ நலமுண்டு. முகமூடிபோட்ட பெண்பாலாரைக்கூட பர்மா தேயங்களில் கூட்டிக்கொண்டு வந்திருக்கின்றனர். சுருக்கிச் சொல்லின் பிராமணர்களே தாங்கள் செல்லும் இடங்களில் குடும்பத்தோடு வஸித்துவருகிருர்களெனில் நாம் ஏன் அப்படி நடந்துகொள்ளலாகாது? முழுதும் நாகரீகமும் உலகானுபவமும் கல்வியும் இல்லாத நம் பெண்கள் சென்ற சென்ற இடங்களில் பலர்களை பார்த்தாவது பலவிஷயங்களையும் திருத்திக்கொள்வர். பெண் பாலார்களை நமக்கு பணிவிடை செய்வதற்காகவும் மடப்பள்ளி வேலை செய்வதற்காகவும் சர்வேஸ்பரன் தரவில்லை. அவர்கள் நம்மைப்போலொத்த தேசமணிகளாக வெளிவராதவரை நாம்

ஒருவிதத்திலும் முன்னேற்றமடைய இயலாது. அவர்களோடு எவ்வளவு வரை நேசத்தை விர்த்தி செய்கிறோமோ அவ்வளவுக்க வ்வளவு அனுகூலமுண்டு. தற்சமயம் ஸ்ரீகாசி முதல் கன்னியாகுமரிவரை கூட்டிச் செல்கிறோம். பெண்களாய்த் தனித்தும் செல்கின்றனர். கப்பல்யாத்திரை யார் செய்யினும் பிரயோஜனமுண்டு. எம் அரிய நண்பர்களில் சிலர் யார் முதலாவது பெண்களை அய்ல் தேசம் கூட்டி வருவர் நாமும் அப்படிச் செய்வோமென யெதிர் பார்த்திருக்கின்றனர் பெண்கள் வரமாட்டோமென்று சொல்லின் அவர்களோடு சாத்வீக யெதிர்ப்புக் காட்டுவதாயும் சொல்லுகின்றனர். ஆண் பாலார் பெண் பாலாரை தனித்துவிட்டு வருடக்கணக்கில் தங்கியிருத்தல் அனேக விதங்களில் நலமில்லாததேயாகும் "அடி சொற்கினியாளே அன்புடையாளேயென" வள்ளுவர் பெருமானே பிரிவாற்றாது சொல்லியிருக்கிறாரெனில் நாம் குடும்பத்தோடிருக்கப் பிரியப்பட்டு கல்யாணஞ் செய்தும் அவர்களோடு கூடி வாழ்ந்து பிரஜாபிவிர்த்திசெய்ய யெண்ணுது பொருள் வருவாயை மட்டும் பெரிதென யெண்ணி சுகபோகமில்லா ஜெயில்க்கூடம் ஏற்படுத்திக்கொண்டு தனித்து வாழ்ந்து வருதல் அறியாமையேயெனலாம். அடிமைச்சீட்டெழுதிக் கொடுக்கும் வழக்கம் அடியோடு தொலையவேண்டும். அப்படி மாறும் நாளே நம்மவர்களுக்கு நன்னாளாகும். அடுத்து வெளிவரும் புத்தகத்தில் நமக்குள் உள்ள இன்னும் அனேக விஷயங்களெல்லாம் வெளிவரும். மனைவியுடன் கூடிய நாம் இருவரும் மிகுதியும் நேசமில்லாதாராயிருந்து வருதலால்த்தான் நம் புத்திர புத்திரி வகுப்பினரும் ஒற்றுமை இல்லாதாராய் வெளிவருகின்றனர் பிதாவுக்கும் புத்திரனுக்கும் ஏற்படும் வேற்றுமையை பத்திரிகை தவராது பார்க்கிறோம். நாம் பல ஜாதியாரை யொப்ப ஒவ்வொரு விஷயத்தையும் கைக்கொண்டு நடந்துகாட்ட முன்வராதவரை அன்னிய ஜாதி சம்பந்தம் இன்னம் அபிவிர்த்தியாகுமென்ற யெச்சரிக்கைக்காகவே இவ்விஷயம் வெளியிட்டனம் "உலகத்தோடொட்ட ஒழுகல் பல கற்றும் கல்லார் அறிகிலாதார்."

## பணம்பிரியம் பச பச யென்கின்றது

மலாய் ஸ்டேட்டிற்கு சிலகோடி ரூபாய் மதிப்புள்ள பொருள்களை கூடுதலான வெள்ளி விலையில் நம்மவர் பலர் மொத்தமாயனுப்பினர். பின் ஏஜண்டுகளின் சொந்தப் பணங்களை சில்லரையாயனுப்பி அதுவும் ஒருவாறு ஓய்ந்தது. ஐரோப்பியர் இங்கிலாண்டுக்கு பணம் அனுப்புவதாலேற்படும் எக்சேஞ்சு நயத்தை உத்தேசித்து வார்லோன் பாண்டுகளையும் விற்றுப்பணம் அனுப்பிவிட்டனர். எக்சேஞ்சு குறைந்திருப்பது ஐரோப்பாவிலும் இங்கிலாண்டின் வியாபாரம் சாஸ்த்தியாய் நடப்பதற்கே. தற்சமயம் இரங்கோனில் பணப் பிரியத்தால் ஒன்று வட்டிக்குமேல் பேசுதல் ராசியில்லையென நகரத்தார் எண்ணினதால் வட்டம் நடைபெறுகிறது. வரவு பணத்துக்கு வட்டி குறைந்தால் மிச்சந்தானென எண்ணிப்போலும் பேங்குக்காரர் 10000ம் 20000த்துக்கு இரண்டு மூன்று ஜாய்ண்டு கைபெழுத்து வாங்கிக்கொண்டு கடன் தந்து வருகின்றனர். முன்னைவிட இப்பொழுது பணப் புழக்கம் சாஸ்த்திதான். வெள்ளி விலை குறையின் எக்ச்சேஞ்சு கூடுகின்றது. வெள்ளி விலை கூடின் எக்சேஞ்சு குறைகின்றது. தங்கங்களும் டாலர்களும் நோட்டுகளும் யெங்கே பார்த்தாலும பரப்பப்பட்டிருக்கின்றன. ஒன்றையும் நிதானமாய்ச் சொல்லக் கூடவில்லை. இன்னும் கொஞ்சநாள்ச் சென்றால் வெள்ளி நாணயம் அனேகமாய் காண்பது அரிதாகிவிடும். கவர்ன்மெண்டோ ஏராளமான தொகை கடன் பெற்றதை கொடுக்கவேண்டியதிருக்கின்றது. யுத்தத்துக்கு முன்னுள்ள சாமான்கள் விலையைக் காட்டிலும் எத்தனை பங்கு உயர்வாகியும் பணமுடை தெரியவில்லை. ஏழைகளுக்குள் பஞ்சம் அதிகரிப்பதால் மரணம் சாஸ்த்தி நேரிட்டும் நேர்ந்து கொண்டும் வருகின்றது. பர்மாவில் நெல் 150-160 தலைவிலை சாஸ்த்தியாய்த் தெரியவில்லை. பணம் மிகுதியாயுள்ள பொருளாளர் பரோபகாரமாக கூட்டுறவு நாணய சங்கங்களையும் தங்கள் சுயஜாதியாரைப் பயிற்றும் பேங்குகளையும் எங்கும் ஸ்தாபித்து தங்கள் ஜாதியார்களை பின்பற்றச் செய்யவேண்டும். நம்மிடம் பொருளிருக்குங்கால் எதையும் நாம் செய்யலாம். பரோபகாரத்துக்காகவே பொருளாளரிடம் பொருளை ஈஸ்பரன்

352

கொடுத்திருக்கின்றார். பொருள் விஷயமாய் வெளியிடுவதை குற்றமாயெண்ணின் நலம் ஏற்படாது. சுயமரபினரிடம் உண்மையைச் சொல்லாது வேறு யாரிடம் சொல்லலாம்? நான் குறிப்பிடும் விஷயங்களைத் தீர்க்காலோசனை செய்தும் எம்மிடம் தெரிவித்துத் தெரிந்துகொள்ளாது குற்றம் கூறின் யாதும் பிரயோஜனமுண்டாகுமா? யான் உங்களின் ஊழியனே. உங்களின் எஜமானனும் உத்தரவிடுபவனுமல்ல, ஆனால் எதுவும் உண்மையையே வெளியிடுபவன். நம் தேயவிளைபொருள்களை அன்னிய தேயத்துக்கு அனுப்பாமல் இந்தியா தேசத்தில் செயற்கைப் பொருளாய்ச் செய்தும் நமக்கு வேண்டிய சிறு அற்ப சாமான்களெனினும் நம் தேயத்திலே செய்தும் செய்வதை ஒவ்வொவரும் ஆதரிப்போமானால் வருவாயை நாமே ஈவு செய்துகொண்டு பணப்புழக்கத்தை விர்த்தி செய்யலாம். செல்வமென்பது சிந்தையின் நிறைவு. பொருள் நிலையில்லாதது என்பதை ஒவ்வொருவரும் அறிந்துகொள்ளவேண்டுமென யெண்ணியே சக்கரவடிவமாயமைத்திருப்பது. சரித்திரம் வெளியிடும்போதே சில பொருளாளர் கூட்டுறவு கம்பனி ஏற்படுத்த முன் வந்ததைப்போல அனேகர் முன் வரவேண்டும். அந்நாளை ஆவலுடன் யெதிர்பார்க்கிறோம்.

### உலகானுபவ உண்மை கண்டு தனவைசிய சமுகமே எழுந்திரு.

உலகமோ ஒவ்வொரு நாளும் மாறுதலடைந்து புதிய சகாப்தமாகமாறி வருகின்றது. உலக வழப்பம் அறியாத தவளை தான் வஸிக்கும் சிறு கேணியே பெரிய உலகமாகவும் ஏழு கடலாகவும் எண்ணியிருக்கிறது. கடலிலுள்ள தவளையோ ஒரு கேணியை சிறு துரும்பாய் மதிக்கின்றது. குளத்தில் தாமரைப் பூவின் தண்டிலுள்ள மதுராமாகிய இரசத்தை உடன்வாழும் தவளையும் மச்சமும் கிஞ்சிற்றும் அறியாது. வெளிப்புரத்திலுள்ள பறவைவர்க்கமாகும் வண்டினங்கள் அறிந்துவந்து சாப்பிட்டு மகிழ்வடைகின்றன. கொடிய யுத்தத்தால் பம்பாய் கல்க்கத்தா முதலிய பட்டினங்கள் பெரிய குபேர ஸ்தானமாகிய அழகாபுரிபோலாயிவிட்டன. அதனால் பூமியும் தாழ்ந்திருக்கின்றது. சென்னை இராஜதானியோ சிற்சிலர் தவிர பலர்

வறுமை யடைந்து வருகின்றனர். எம்மவர் வட்டித்தொழில் இனிப்பயன்படாதென்ற உண்மையை அறிந்து 100க்கு 2-1 ஆக ஒருவரிருவர் வியாபாரத்தை ஆரம்பித்திருக்கின்றனர். சிலர் நாள் பார்த்தும் சிலர் கேலி செய்தும் வருகின்றனர். அனேகம் கடைகளில் முதலாளிகளாகும் தனவந்தர்கள் சுய நகரங்களிலிருப்பவர்களுக்கும் இவ்விஷயங்கள் தெரியும்படி இப்புத்தகங்களை பரப்பப்படும். நாம் பிறந்தமுதல் மயானஞ் செல்லும்வரை வேலைதான். வேலையே சதா செய்துகொண்டு ஓய் வில்லாதிருக்கும் நம் உடலாகிய மிஷின் சீக்கிரம் கெட்டுவிடுவ தற்கு ஓய்வில்லாது வேலை செய்துகொண்டு வருவதுவே முக்கிய மான காரணம். ஒரு நாளைக்கு 8-மணி நேரம் வேலை செய்யக் கூடிய மிஷினை 10 வருட வேலையுடன் தள்ளுபடி செய்வதைக் காட்டிலும் இரண்டு மிசின் வைத்து 30-35 வருடம் வேலை செய் தால் எவ்வளவோ பயனுண்டு. அதேபோல நம் திரேகமாகிய மிஷினும் இதன் தத்துவங்களை பள்ளிப்பிள்ளைகட்கும் விளங்கும் படி அவதார புருடராகிய டாக்டர் சர் சகதீச சந்திரபோஸ் வெளியிட்டிருக்கின்றார். பகலில் ஒவ்வொரு நாளும் ஏற்படும் திரேக சிரமத்தை இரவில் நிவர்த்தி செய்துகொள்ளுவதற்காகவே ஈஸ்பர சங்கற்பத்தில் இரவு என ஏற்பட்டுள்ளது. இதன் உண்மையை நம் வைசியர்களல்லாத மற்ற யாவரும் அறிந்து தான் இன்ன இன்னவேலைகளை இன்ன நேரத்தில் செய்வ தெனவும் இத்தனை மணிக்குமேல் யாதொரு வேலையும் செய்வ தில்லை யென்பதையும் கையாண்டு வருகின்றனர். நாமோ நின்ற நாளைக்கு நெடுஞ்சுவர் விழுந்தபோது குட்டிச்சுவர் எனத் திரேகத்தைக் கெடுத்துக்கொள்ளுவதுடன் ஈஸ்பரன் கட்டளை யும் அலட்சியம் செய்து வருகிறோம். பகுத்தறிவைப் பெற்றது அறிந்தவழி நிற்றற்கே.

## இன்கம்டாக்சால் ஏற்படும் இடுக்கண்.

நாங்கள் சென்றுவரும் பல இடங்களில் இன்கம்டாக்ஸ் உபத்திரவங்கள்பல. தமிழ் சம்பந்தமான அஸெஸர்கள் இல்லாத ஊர்களில் நம்மவர்கள் சிலரால்தான் தமிழில் கணக்கு பரிசோதிப் பவர் ஏற்பட்டதாய் தெரிகிறது. கணக்கு நாம் சரியாகவைத்

துக் கொள்ளவில்லை. கற்றுக்கொள்ள எண்ணவுமில்லை. நம்மிடம் கடன் பெற்று சரக்கு வாங்கிக் கட்டுபவர்களுக்கு வருடமொன்றுக்கு எவ்வளவோ ஊதியம் கிடைக்கின்றது. அவர்களிடம் வருடாவருடம் இன்கம்டாக்ஸ் ஏன் கூட்டிவாங்கவில்லை? நாம் முன் வருஷம் 500ரூ. கொடுத்தால் இந்தவருஷம் 1000 கொடுக்கவேண்டியதிருக்கின்றது. அதற்கு கேள்வியுமில்லை; கேட்பாருமில்லை. நாம் வாய் பேசாத சாமிகள்தானே. இங்கு வாங்குதல் மட்டுமல்ல நம் ஜெனன தேயத்திலும் பெருகிருர்கள். சாஸ்த்தியாய் இன்கம்டாக்ஸில் அனேக லட்சம் கொடுக்க நேர்ந்திருப்பதின் காரணம் கணக்கு சரியான முறையில் வைத்துக்கொள்ளாததும் கல்வி போதியவளவு இல்லாததும் நம்மிடம் பெரிய காந்த சக்தியிருந்தும் ஒற்றுமை இல்லாததும் பிரயோகிக்கும் வழி தெரியாததுமே என்னலாம். உள்ளபடியில் நாம் கவர்ன்மெண்டுக்கு கொடுத்தாலும் பயனுண்டு. மீதமுள்ளவை இரட்டிப்பாக பிரயோஜனமில்லாத வழியில் போகின்றது. கொடுத்தும் கொல்லை வழிதான். பெரிய வியாபாரிகள் பேங்குக்காரர்கள்மாதிரி பெரிய முதலாளிகள் பலவிடங்களிலுள்ள கணக்குகளையும் ஒரே இடத்தில் வைத்து தயார் செய்து இன்கம்டாக்சை கட்டலாம். அதோடு பெருந்தொழில் பலவிடங்களில் செய்யும் நம்மவர் வருஷத்தில் இரண்டுமுறை கொண்டுவிலை செய்யும் இடங்களுக்கு கணக்குப் பரிசோதித்து முதலாளிகட்கு தெரிவிக்கும்படி சில இன்ஸ்பெக்டர்களை அனுப்பலாம். அதனல் முதலாளிகட்கு நலமுண்டு. மானேஜர்களுக்கும் அதைவிட எவ்வளவோ நலமுண்டு.

## காண்பதில் பெருமை கல்வியே எனலாம்.

படிப்பு படிப்பு என்று சொல்லிக்கொண்டிருப்பதால் படிப்பு வந்துவிடுமா? இந்தியாவில் சராசரி 100-க்கு 6 பெயர்தான் ஆண்பாலாரில் கல்வியுடைவரென்ருல் வைசிய சமூகத்தவரில் அதிலும் பாதி யெனலாம். நாம் ஆண்பாலாருக்கு தற்சமயம் சொல்லிக்கொடுக்கக்கூடிய அரிச்சுவடி எண்சுவடி முந்திரிலக்கம் பிறவாச்சுவடி ஏதாவது இன்னம் 3 சுவடிகளை எப்படி கல்வி யென்பது? 10-வயதுக்குள் பையன் படித்தது போதுமென கொண்டு விற்க கூட்டிவந்து விடுகிருேம். கல்வி கற்கக்கூடிய வய

தில் அந்நிய நாட்டுக்கு கூட்டி வருதல் இரண்டும் கெட்டான் பிழைப்புத்தான். 20 25-வயது வரை இருபாலாருக்கும் கல்வி கற்று வைப்பின் எவ்வளவோ பயனுண்டு. வியாபாரக்கல்வி கைத் தொழில் கல்விகளை கற்க அன்னிய தேசங்கட்கும் நம் புத்திர வர்க்கத்தாரை அனுப்பும் நாள் எந்நாளோ? கல்வி நன்கு படித்த பையன்களுக்குத்தான் பெண் கொடுப்பதென்று ஒரு நியமனத்தை அநுஷ்டிப்பின் கல்வி எவ்வளவோபரவும். கல்வி யென்பது போதிய தாய்பாஷையும், ராஜாங்க பாஷையும், சமஸ்கிருதமுமாகும். "கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே" "எக்குடிப் பிறப்பினும் யாவரேயாயினும் அக்குடி கற்றோரை வருகயென்பர்" "மன்னனும் மாசறக் கற்றோனும் சீர் தூக்கின் மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் மன்னனுக்குத் தனறேய மல்லால் சிறப்பில்லை கற்றோற்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு" "வெள்ளத்தால் அழியாது வெந்தழலால் வேகாது வேந்தராலும் கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும் நிறைவன்றிக் குறைவுறாது கள்ளர்கோ பயமில்லை" எனப் பெரியார் பலர் புகன்றிருக்கின்றனர். ஜஸ்டிஸ் முத்துச்சாமி அய்யர் முனிஸ்பல் ரோட்டு விளக்கில் படித்துக்கொண்டவர். பிராமணப் பிள்ளைகள் இரவு நேரம் பள்ளிப்பாடத்தை படிக்கும் சமயம் குடுமியை ஒன்றில் முடிந்துவிட்டு படிப்பதுண்டாம் தூக்கம்வரின் சிரேகம் அசையும்போது குடுமி ஞாபகப்படுத்து மெனவே. தகப்பன் யாசகம் பெற்றேனும் பிள்ளையை நன்கு கற்றுவைத்து விடுகின்றனர். படிப்பில் அவ்வளவு தீவிரமிருந்ததால் எவ்வளவோ மேலாயிருக்கின்றனர். சுருக்கமாய் சொல்லின் "கண்ணுடையரென்பர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவ" ரென்றார் மஹான்கள், எக்கல்வி கற்றாலும் பெருமையுண்டு, எனினும் தாய் பாஷையே சிறந்தது. ஒரு பாஷை ஒருவருக்கும் சொந்தமுடையதல்ல. கல்வியை கற்று தர்க்கத்தில் பிரயோகிப்பதால் யாதும் பயனில்லை. நம்மவர் வேத சாஸ்திர பாடசாலை பல ஏற்படுத்தி படித்துவருபவர் அதன் அர்த்தமே தெரியாது சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளைபோல் குருட்டுப்பாடஞ் செய்ய உதவி செய்வதைவிட தாய் பாஷையையும் ராஜாங்க

பாஷையையும் இராஜாங்கத்தார் உதவியை நாடாது நாமே பெருந் தனத்துடன் ஆரம்பித்து, காரைக்குடி ராமச்சந்திரபுரத்தில் ஏற்பட்டு நடைபெறும் கல்வியாலயங்கள்போலவும், சிதம்பரத்தில் சா ராம மு அ அவர்களால் ஏற்பட்ட ஸ்ரீ மீனாட்சி கல்லூரிபோலவும் ஏற்படுத்தி கவர்ன்மெண்டாரிடம் ஒப்புவித்தலே சாலச் சிறந்ததாகும். ஒரு இடத்தில் பெருந்தனம் சேர்க்கப்பட்டு கல்வி ஆலயம் சரியாய் நடைபெறாது கல்விக்காக வட்டி நடப்பது பலவிதத்தும் விசனத்திற் குரியதே. கல்வி ஆலயத்தை நாம் வைத்து நிர்வகிக்கும் நாள் எவ்வளவோ ஆண்டுகளிருக்கின்றன. "தந்தை மகற் காற்றும் நன்றி அவயத்துள் முந்தி இருப்பச் செயல். மகன் தந்தைக் காற்றும் நன்றி இவன் தந்தை என்னோற்றான் கொல்லெனும் சொல்" கல்வியைவிட சிறந்த தனம் எந்த இடத்திலுமில்லை. கல்வி ஆலயமே புத்திரி புத்திரவாக்கத்தாரை நல்வழிப்படுத்தி மேன்மை யடையச் செய்யும் நல்லாலயம் 'ஒரு கல்வி ஆலயம் ஏற்படின் ஒரு ஜெயில் கூடம் அடைபடும்' என்பது ஓர் சிறந்த பழமொழி. ஆலயத்தில் சிறு வயதில் படிக்கும் கல்வியுடன் சாஸ்திர ஆராய்ச்சியும் பத்திரிக்கை ஆராய்ச்சியும் இருந்து வருதல் அத்தியாவசியம்.

## நிலத்தீர்வையாலேற்படும் நிகழ்ச்சி.

டாங்கோ எமெதீன் பக்கங்களெல்லாம் நிலம் வெள்ளாமை செய்யாதிருந்து நாம் முன்னமே கவர்ன்மெண்டுக்கு தெரிவித்துக் கொள்ளின் பில்லுத்தீர்வை யெனும் சொற்பத்தீர்வையை போடுகிறார்கள். மோல்மேன் பக்கங்களில் அவ்வழக்கமில்லை முழுத்தீர்வையும் கட்டித்தீரவேண்டும். கட்டாவிடின் நிலத்துக்குச்சில் கொண்டு போகாது பெட்டிக்குச்சில் கொண்டுவந்து நம்மவர்களிடந்தான் வசூலிக்கின்றனர். பர்மாவில் ரெவ்னியூச் சட்டம் இரண்டு மாதிரியல்ல பெரும் நிலங்களை பர்மாவில் வாங்கியும் வாங்கிக்கொண்டும் வரும் நம்மவர்கள் எவ்வளவு சாஸ்த்திவரிப்போடினும் நியாயந் தெரிந்து கொள்ளாது கொடுத்து வருதல் சரியாகுமா? ஒவ்வொரு ஸ்தாபனங்களிலும் நாம் இடம் பெற்றுக்கொள்ளின் இப்படிச் செய்வார்களா? 10 வருஷத்துக்கு முன் கொண்டுவந்த நிலப்பராதீனச் சட்டத்தை. மீண்டும்

பர்மாவில் கொண்டுவர முயற்சி செய்துவருகின்றனர். அப்படி கொண்டுவந்து சட்டமாக்கிவிடின் நம் சொத்துச் சுதந்தரங்களுக்கு அதோ கதிதான், பர்மாவை தற்சமயம் யோசிக்கிறபடி இந்தியாவிலிருந்து பிரித்துவிடின் எவ்வளவோ நம்மவர்களுக்கு கெடுதலுண்டு. தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களை நடத்தும் மாதிரியை ஒவ்வொருவரும் அறிந்திருப்பர். முந்தின வருஷம் நெல் கண்டிரோல் ஏற்பட்டிருந்த காலத்தில் யாருடைய நெல்களையெல்லாம் உடைத்து கேள்வி கேட்பாடில்லாது அள்ளினூர்கள்? செட்டிப்பிள்ளைகளும் நெல்லுக்கட்டிச் சம்பாதிக்க முன்வந்து விட்டார்களென யெண்ணிப் பொறாமை கொண்டசீனரும் பர்மியரும் கவர்ன்மெண்டு உத்யோகஸ்தருக்கு உளவு சொல்லிக் கொடுத்து நம் நெல்களை அள்ளச் சொன்னூர்கள். மற்ற ஜாதியார் எவ்வளவோ நெல் கையில் வைத்துக்கொண்டிருந்தும் ஏன் உடைத்து அள்ளவில்லை? தங்கள் சமூக நற்காலத்தின் அறிகுறியாக பர்மாவில் ஏற்பட்டுள்ள நாட்டுக்கோட்டை செட்டியார் அசோசியேஷனை ஒவ்வொருவரும் ஆதரித்து சிலநாள்ச் சென்று வர்த்தக சங்கமென அதற்குள்ப்பட்டதாக ஒரு சங்கமும் ஏற்படுத்தியோ ஏற்பட்டிருப்பதோடு சேர்ந்தோ நிலத்தீர்வை எவ்வளவு நிலங்களுக்கு எவ்வளவு துகை கட்டுகிறோமென்பதையும் பர்மா முழுதும் இவ்வளவு இன்கம்டாக்ஸ்கல் கட்டுகிறோமென்பதையும் கணக்கெடுத்து சில பிரபல லாயர்களை ஏற்படுத்தி கவர்ன்மெண்டினிடம் தெரிவித்து வேண்டிய அனுகூலத்தைப் பெறலாம். நெல்லுகளை கீழ் அதிகாரிகள் உடைத்து ஐரோப்பிய கம்பனியாருக்கு கொடுத்துவிட, அது வேறொருவருக்கு விற்று விட்ட நெல்லென கவர்னர் வரை விடாது வழக்காடி நம்மவர் இருவர் ஜெயம்பெற்றதால் எல்லாருடைய நெல்லுக்கும் விமோசனம் கிடைத்தது. அவ்விருவர் மவுஞ்சவுட்டான் சிராம. நாச்சியப்ப செட்டியாரும் இரங்கோன் ஆதகுபனசுப வீரப்ப செட்டியாருமாவர். விடாமுயற்சி என்ற தோழனிடம் அடுத்தடுத்து நேசஞ் செய்யின் எவ்வளவோ நலமுண்டு.

**சிரத்தையுடன் கூடிய ஊக்கம்.**

“ ஆக்கம் அதர்வினுய்ச் செல்லும் அசைவிலா ஊக்கமுடை

யானுமை" என்பது பெரியார் திருவாக்கு. பிரிட்டிஷ் இராஜாங்கத்தாரிடம் விடாது நம் அபிப்பிராயத்தை தீர்மான மூலம் தெரிவித்துக்கொண்டேவந்தால் அனுகூலம் அவசியம் ஏற்படும் ஒன்றல் என்ற சுயாட்சியானது கனவாக இருந்தது. இப்பொழுது எப்படியானது? பஞ்சாப் விஷயத்தைப்பற்றி போட்ட கூக்குரல் ஒருவாறு பயன்பெறாது போயினும் இங்கிலாண்டு முதலிய மற்ற தேசத்தாருக்கு உள்ள விஷயத்தை நன்கு எடுத்துக்காட்டாது போகவில்லை. காங்கிரஸ் எவ்வளவோ வருடம் விடாமல் தொடர்ச்சியாக வேலைசெய்து பலமடைந்து வருகின்றது. காங்கிரஸ் முஸ்லீம் லீக் பிரதிநிதிகள் ஐரோப்பா சென்று பிரசார வேலையை தொடர்ச்சியாய் செய்ததின் பயனாக ஓர்வித கிளர்ச்சி இங்கிலாண்டில் உண்டாகி 10 வருஷத்தில் கவர்ன் மெண்டை நடத்தும் தொழில்கக்ஷியார் முழு உதவி செய்ய முன்வந்ததோடு இந்தியா விஷயத்தைப்பற்றி அடிக்கடி கவனித்தும் வருகின்றனர். அயல்தேசத்தில் அற்றைக்கூலி வேலை செய்பவர்களுக்கும் தேசாபிமானம் மிகுதியாயிருந்துகொண்டிருக்கும் இந்தியாவில் எங்கேபார்த்தாலும் தொழிலாளர் கிளர்ச்சி மிகுதிப்பட்டு நவசக்தி உதயம் நிர்த்தனஞ் செய்து வருகின்றது. ஏகபோகமாயுண்டுவந்த தொழில் முதலாளிகள் செய்கையை இப்பொழுதுதான் தொழிலாளர் அறிந்துகொண்டு நியாயப் போராடிவருகின்றனர். இனி தொழில் முதலாளிகள் எதேச்சையாய் ஆண்டனுபவிக்கவும் கண்ணுக்குத் தலை தெரியாது தாறுமாறாய் களியாட்டம் போட்டு கெக்கலி கொட்டவும இடம் கொடாது ஏழை அழுத கண்ணீர் கூறியவாளொக்கும். ஒவ்வொரு நாளும் எத்தனையோ மணி நேரங்கட்கு நெற்றி வியர்வை நிலத்தில் வடிய பாடுபடுபவர்கட்கு போதிய சம்பளம் கொடுக்கவேண்டியதும் வேலை நேரத்தைக் குறைக்கவேண்டியதும் அவசியந்தான். சில தேசாபிமானிகள் தேசாபிமானம் மனதிலிருப்பதா யெண்ணிக்கொண்டிருக்கின்றனர். தொழிலாளருக்கும் மற்ற குறைபாடுள்ளவர்கட்கும் உதவி செய்ய முன் வந்தால்தான் ஒவ்வொருவர் தேசாபிமானமும் நன்கு தெரியும். இந்த உலகத்தில் உள்ளார் அனைவரும் தொழிலாளர்களே

இராஜாங்க விரோதிகளென எண்ணிய பஞ்சாப் தலைவர்களையும் மற்றுமுள்ள இராஜாங்க கைதிகளையும் விட்டுவிடவேண்டுமென கருணையே ஓர் உருவாய்க் கொண்ட நம் சக்கிரவர்த்திப் பெருமான் ஸ்ரீமுகம் அனுப்பினர். பஞ்சாப் தலைவர்கள் காங்கிரஸில் ஆஜராகியிருந்தது ஜனங்கட்கு எவ்வளவோ குதூகலத்தை தந்தது. சில பத்திரிகைகளுக்கு ஜாமீனாகக் கட்டியிருந்த தொகைகள் (யானைவாயில் போனதும் மீண்டது) பரிமுதல் செய்தவைகளை கவர்ன்மெண்டார் மனமகிழ்ந்து வாபீஸ் செய்துவிட்டனர். இவைகளெல்லாம் தேசாபிமானிகள் செய்துவந்த கிளர்ச்சியாகும் விடாமுயற்சியின் பயனல்லவா? ஊக்கத்துடன் கூடிய விடாமுயற்சி யென்பது எவ்வளவோ தூர இடங்கட்கும் செல்லவும் பரப்பவும் சக்தியுடையதாகும். தெய்வ சிருஷ்டியில் அடங்கிய ஒருவரது சக்திக்கு ஏற்படும் பயனைவிட அனேகர் சேர்ந்து செய்யும் முயற்சிக்கு எவ்வளவோ பலனும் பயனுமுண்டு.

## தேக அப்யாசம் திறமாய்க் கைக்கொள்ளல்.

நம் சகோதரர்கள் தற்கால உலக மாறுதலில் பல விஷயங்களை அறிந்துகொண்டு அறிந்துகொண்டதுடனில்லாது பின்பற்றி நடந்துவருகின்றனரென்பதை நம் நாட்டில் சிறு விளையாட்டுக்கென ஏற்பட்ட பாட்மிண்டன் கிளப்புகள் தேசாபிமானச் சங்கங்களாய் மாறிவருவதாலும் ஆலயங்களுக்கு பதில் புத்தகாலயங்கள் ஏற்படவேண்டியது அவசியமென அறிந்து ஒவ்வொரு இடங்களிலும் மஹான்கள் சதா வசிக்கக்கூடிய புத்தக ஆலயம் ஏற்பட்டு வருவதாலும் பர்மாவில் நாங்கள் சென்றுவரும் சிற்சில இடங்களிளெல்லாம் திரேக அப்யாசம் தற்காலத்துக்கு மிக முக்கியமென்பதை அறிந்து செய்துவருவதாலும் ஒவ்வொருவர்களும் மற்றவர்களை யொப்ப பலவிதத்தும் உன்னத நிலையை அடையவேண்டுமென்ற எண்ணத்தை உறுதியாகக் கொண்டுள்ளார்களென்பதை எளிதில் அறிந்துகொண்டோம், திரேக அப்யாசமென்பது பந்தடியிலிருந்து சிறு ஒற்றுமை ஏற்பட்டதின் பயனாக திரேக பயிற்சியாய் மாறிவிட்டது. அதற்கு தோதாக இந்தியா முழுதும் வாலிபர் சங்கங்களும் சாரணர் சங்கங்களும் மாணவர் சங்கங்களும் ஏற்பட்டு நடைபெற்று வருகின்றன. திரேக அப்யாசமென்பது திரேகத்தைப் பழக்குதல். நாம் சொல்லுகிறபடி திரேகம் வேலை செய்வதற்கு காலையில் எழும்பியவுடன் முகம் வாய் சுத்தஞ்செய்து 15 நிமிடம் முதல் 1 மணி வரை நரம்புகளுக்கும் திரேகம் அத்யந்தத்துக்கும் வேலை கொடுத்தல். யுத்தத்துக்கு படையில் சேருபவர்கள் திரேகப் பயிற்சி சரியாகச் செய்யா

விடின் 6 மாதம் வரை பார்த்து விலக்கிவிடுவார். நாம் சோம்பேறியாகிய வேலையாளனை வைத்திருக்கப் பிரியப்படுகிறோமா? நாமே சோம்பேறியாயிருந்தால் நம்மைக் கேட்பவர்தான் யாருமிலரே. நாங்கள் தேசசேவை செய்ய வெளிவந்த இக்காலத்தில் கால மாறுதல் சக்கரம் நம் உரிய சகோதரர்களுக்கு இந்த எண்ணத்தை உண்டாக்கிவைத்துவருவதைப்பற்றி அளவில்லா மகிழ்ச்சியடைகிறோம். நம் நாடு விரைவில் நன்றாக ஆகிவிடுமென்ற நம்பிக்கையை மெய்ப்பிக்க இது சாதனமுமாகின்றது. நரம்பும் இரும்பும் பிடித்தவன் கை சும்மாயிராது. வலியச் சண்டைக்கு முரட்டுபலத்தை காட்டச் செய்யாது எந்நாளும் பரோபகாரம் செய்யவே தூண்டிக்கொண்டிருக்கும் ஒரு சிறு எறும்பும் தேனீயும், விருட்சங்கள் மிருகங்களும் செய்யக்கூடிய உதவியை அவயவப்பழுதும் அங்கஹீனமுமில்லாத மானிடராகிய நாம் செய்யவில்லை. ஒரு சிறு ஜீவஜெந்துவும் தன் வயற்றுக்கு அவ்வக்காலங்களில் தேடிக்கொள்ளுவதுடன் சில மாதங்களுக்கு கையிருப்புச் செய்துகொள்ளுகின்றன. தேசங்களிலெல்லாம் சோம்பேறித் தேசம் எதுவென ஆராயின் அவரவர்கள் சொந்த ஜீவனத்துக்கேனும் கைத்தொழிலில்லாத இவ்விந்தியா தேசமே என்று வெளிப்படும். பயில்வான் சன்னாசி என்று அழைக்கும் தவராச சிங்கமாகிய சுவாமி விவேகானந்தர் அவதரித்து ஊக்கத்துடன் சதா நேசஞ்செய்துவந்த நம்மை (சோம்பரென்பவர் தேம்பித்திரிவர்) கொஞ்சம் விழித்துப் பார்க்கும்படி தேசசஞ்சாரஞ்செய்து பற்பல விஷயங்களையும் தெரிவித்துவிட்டு வந்த வேலையை முடித்துக்கொண்டு தேவசபை சென்றுவிட்டனர். நம் தேய நன்மையின்பொருட்டே ஏற்பட்டுநின்ற கொடிய யுத்தமானது சில சமயம் அயர்ந்து அஜாக்கிரதையாயிருந்த நம்மை நன்கு விழித்து முன்னேற்றத்திற்கான வேலை செய்யாவிடின் காலசக்கரப் போராட்டத்தில் ஜெயம்பெற ஏதுவாகாதெனவும் சம்பாதிக்கும் பொருளை பலவிதத்தும் நம்மிடமிருந்து பலர் கொண்டுபோய்விடுவாரெனவும் நன்கு அறியச் செய்துவிட்டது. முன்னமோ இன்ன இன்ன சமயம் யுத்தம் நேரிடுமென எக்கிரிமெண்டால் நிதானிக்கக்கூடியதாயிருந்தது. இனியோ இன்ன சமயமென இல்லை. நரம்பு பலமுள்ளவர்களாயிருப்பதற்கு திரேக அப்யாசம் அதிமுக்கியமாய் வேண்டியது. வாளானது ஒவ்வொரு நாளும் வேலைசெய்துகொண்டிருந்தால் எப்படிபளப்பாயிருக்கும், வேலை செய்யாவிடின் துருவேறி வேலைசெய்யவே தோதில்லாது போகும். நரம்பும் வாளைப்போலவே. பாத்திரத்தை ஒவ்வொருநாளும் சுத்தம் செய்வது எதற்காக? தீராத நோய்களில் பல திரேக அப்யாசத்தால் தீர்ந்துவிடுகின்றன. திரேக அப்யாசம் முதன்முதல் கொஞ்சம் சிரமமாக

சில நாட்களுக்கு தெரியினும் பின்னால் ஏற்படும் பயனால் அபிமானம் அபிவிர்த்தியடையும். கரும்பு தின்னக் கைக்கூலி வேண்டாம். நாம் சொன்னபடி கேட்க நம் உடம்பைச் செய்து கொள்ளுவோமானால் அது சொன்னபடி நாம் கேட்கவேண்டாம். பித்தம் தெளிந்து ரத்தம் இருக்கவேண்டிய அத்தனை இடங்களில் ஓடித் தங்கி ஒருவித புதிய தேஜஸ் உண்டாகும். நெஞ்சு வலிறும் புஜம், கை, கால் நரம்புகள் பெலனுறும். பசி அதிகரிக்கும் வியாதி கிட்டவும் அணுகாது. எந்தவிதமான வேலையையும் பிறர் செய்ய ஏவாமல் நாமே வெகு சீக்கிரம் செய்யலாம். சோம்பலென்ற மூதேவி கிட்டவும் அணுகாள். நம்மைப் பார்த்தவுடனே யாரும் பிரமிப்பதோடு வசியத்தன்மை நம்மிடமிருப்பதால் மிருகங்களும் வசப்படும். பொருள் அபகரிப்பதே தொழிலாய்க் கொண்ட ஜாதியார் நம்மைக் கண்டு பயங் கொள்ளுவர். நாம் வைத்திருக்கக்கூடிய பொருளை "எ இந்தா" என்பதன் முன் ஒன்றரைப் பர்லாங்கு தூரம் ஓடி "நில்" என்பதன்முன் பெட்டிச்சாவியை எறிந்துவிட்டு "ஏதாவது ஆபரணமுண்டா" என்பதன்முன் "ஐயா, கள்வர் சுவாமிகளே, பெட்டியைத் திறந்து இருப்பதெல்லாம் எடுத்துக்கொள்ளுங்கள். உங்களுக்காகத்தான் இவ்வளவும் சேர்த்துவைத்துள்ளோம்" எனச் சொல்லவேண்டாம். ஒரு சமயத்தில் ராஜாங்கத்துக்கும் நம் தேயத்துக்கும் ஆபத்துவரின் யுத்த ஊழியஞ் செய்யலாம். நமக்கு உதிக்கும் புத்திர வர்க்கங்களும் ஓந்தி, கரட்டான், மூஞ்சுரு மாதிரி சொல்ப வயதினதாய் ஜெனிக்காது. இந்தியாவில் புஜபலமும் உழைப்புமில்லாததால் சராசரி 100-க்கு 26 வயது என்பது சரித்திர பூருவமான உண்மை. திரேக அப்யாசத்தால் சந்ததிகள் நீடித்த ஆயுள் உள்ளவர்களாயும் புஜபல பராக்கிரம முள்ளவர்களாயும் உதித்து (விரையொன்று போடச் சுரை ஒன்று முளைக்குமா?) நம் தேயத்தை விரைவில் உன்னத நிலையை அடையும்படி செய்துவைப்பார்கள். தேச சேவை செய்வதே பிறவியின் பயனென எண்ணி செய்ய வந்த உத்தமோத்தமர்களும் ராமச்சந்திரபுரம், காரைக்குடி, கோனாபட்டு, பலவான்குடி, சொக்கலிங்கம், புதூர், புதுவயல், வேந்தன்பட்டி முதலிய இடங்களிலுள்ள கலாசாலையாரும் திண்ணைப் பள்ளிக்கூடத்தார்களும் சகோதரர் அனைவர்களுக்கும் இயன்றவரை திரேகப்பயிற்சியை சிறுவயதிலேயே (அஞ்சில் வளையாதது ஐம்பதில் வளையாது) கைக்கொள்ளச் செய்யவேண்டுமென பரிவோடு தெரிவித்துக்கொள்ளுகின்றனம். சில வருடங்களில் நம் நகர வட்டகைகளில் திரேக அப்பியாசஞ் செய்பவர்களையே ஓர் கூட்டமாகத் திரட்டி நம் நாட்டாருக்குக் காட்டி அதனால் அடையும் பயனை அறியும்படி செய்யலாம். அந்நாளை ஆவலுடன் எதிர்பார்ப்போமாக.

## புகழ்ச்சிக்குரிய புத்திரன் உதித்தனன்.

நாம் சில மாதங்களாய் சதா சர்வேஸ்பரராகும் பிரபுவினிடம் கேட்டுக்கொண்டிருந்தபடி அரிய பெரிய புத்திரன் நாளது தைமீ 26உ ஞாயிற்றுக்கிழமை நற்கைங்கரியத்துக்கு அதி உன்னதமான சிகரத்தில் ஏற்றிவைத்த ஒளி மழுங்கா தீபத்தைப்போல பல ஊர் நகரத்தார்களுக்கும் வழி காட்டியாக ஏற்பட்ட பர்மா நகரத்தார்களது அனுமதியும் ஆதரவும் பெற்று இரங்கோன் மொகல்ரோட்டு ஆறரை மேல்வீட்டு நம் குலகுருவாகும் குகப்பெருமானது திருச்சந்நதியில் பாரத மாதாவின் செல்வப் புதல்வனாய் ஒற்றுமையே ஓர் உருவாய்க்கொண்டு (சர்வம் ஏகம் சகோதரத்வம்) நாட்டுக்கோட்டை செட்டியார் அசோசியேஷன் என்ற நாமத்துடன் வெளிவந்தனன். பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு மங்களம் எங்கும் பொங்கித் தங்குக வென எல்லாரும் ஆசீர்வதித்தனர். எந்த நற்காரியத்தையும் பரஸ்பரம் சந்நதியிலே செய்து வெற்றிபெறுதல் நம் ஆதிகால வழக்கம். அதன் திறப்பு வைபவத்தையும் நாமதேயத்தையும் ஸ்ரீமாந் சாராம முசித ஏஜண்டு வெங்கிடாசல மகிபர் பரிவுடன் ஏற்று நடத்திவைத்தனர். அப்புத்திரனைப் பலர்களும் ஆதரித்து ஆசீர்வதித்து சீராட்டி வளர்த்து அடிக்கடி கை ஏந்தி எடுத்து முத்தமிட்டு மங்கள வாழ்த்துக்களும் செய்து அவனிடம் உரிமை பாராட்டி புத்திரனை சிரஞ்சீவியாயிருக்க வாழ்த்தி தேச சம்பந்தமாய் பல இடங்களிலும் உழைக்கத் தயார் செய்து வைக்கும்படி நடனவிலாச சபையில் சதா ஆனந்தத் தாண்டவமிட்டு உலகத்தாரை அன்பால் ரக்ஷித்தருளும் அம்பிகை பாகனாகிய அம்பலக் கூத்தனை அனுதினமும் பிரார்த்தித்துக் கேட்டுக் கொள்ளுவோமாக.

தாசானு தாசனாகிய யான் எம்மவர்களுக்கு இதுவரை செய்துள்ள ஊழியம் பெரிதென வெண்ணியோ அதற்கென என்னை உரியவனாக்கிக்கொள்ளச் செய்யவேண்டுமென நினைத்தோ ஆண்டிலும் அறிவிலும் அனுபவத்திலும் சிறியேனாகிய எனக்குப் புகழாக முன் அறிந்திராத இருவரால் ஏற்படுத்தியனுப்பிய பாமாலையை இதில் தெரிவித்துள்ளேன் வீண் டாம்பீகமாகிய புகழில் மகிழ்ந்துவிடின் நானும் எம் கூட்டத்தாரும் செய்யவிருக்கும் பலவித வேலைகளை செய்ய இயலாது. அகம்பாவத்தில் அமிழ்ந்துவிடுவோமென மிக அஞ்சுகின்றேன். சில தினத்தில் சுயவாஸஸ்த்தலம் சென்று விரைவில் இரங்கோன் வந்து நான் ஏற்படுத்திக்கொள்ளும் சிறுவருவாயுடன் பொது வேலையை சிலவருடம் விடாது செய்து வரவும் கரும்பினால் ஏற்படும் நலத்தைப் பருகிக் காட்டவும் கூட்டுறவுடன் கூடிய

பண்டக சாலை ஏற்படுத்தி நம் தேயவினை பொருள்களை நாமே வாங்கி உபயோகித்து நம் தேய கைத்தொழில்களை இயன்ற வரை விர்த்திசெய்து நமக்குள் பண மாறுதல் ஏற்படக்கூடிய முயற்சியைச் செய்யவும் மனம் தூண்டிவருகின்றது "பாராதி தனிலுள்ள செயலெல்லாம் முடிவிலே பார்க்கினின் செயலல்ல வோ" என்ற மேலோர் ஆப்த வாக்கியப்படி எம் எண்ணம் ஜெய மடையுமாறு எம்பெருமான் கிருபை செய்வாராக.

"எண்ணிய வெண்ணியாங் கெய்துபவர்
எண்ணியார் திண்ணிய ராகப்பெயின்"

சாந்தம். சாந்தம். சாந்தமே உண்டாவதாக.

---

உ

கணபதிதுணை.

சீராரும் ரெங்கூன் றிகழா றறைமுருகன்
பேராரும் வைசியர்க்குப் பேசுவதே—ஏராரும்
பூசவிழாவின் னெமெய்தின்பூம் பழனியப்பனெனும்
நேசமுளான் பேசும் நெறி.

(கல்லுப்பட்டி S. சாமிநாத செட்டியார்)

கண்ணுக்கினிய மரகதமே கருத்துக்கினிய பேரொளியே
விண்ணுக்கினிய பெருமானே விழைந்தோர் விக்கினங் [கடியும்
எண்ணற்கரிய கழுடையா யேரப்பாளங் குலவணிகர்
மண்ணிற் சிறந்து முன்னேறி மகிழ்ந்துவாழ வழங்கருளே

(தீ. சோ வீட்டிலிருந்து தவறியவர்.)

சொகநேந்தல் பழனியப்ப செட்டியார்.

உ

# முடிவுரை.

---

கண்ணியம் வாய்ந்த புண்ணிய சீலர்களே!

அனேக நாள் அரும்பிரயாசையுடன் செய்துவந்த பிரயாணங்களில் கண்ட உண்மைகளைப் பலர்களும் தெரிந்துகொண்டால் நலம் ஏற்படுமென்ற எண்ணங்கொண்டு வெளியிட்டதே தேச யாத்திரை அல்லது பிரயாண அனுபவமெனும் நூல்.

நூல் என்பது வழி. வழியாகிய மார்க்கத்தில்கண்டு, உணர்ந்த அனுபவ விஷயங்களே இதிலடங்கியிருப்பது. அதாவன :—

1. மங்கலப்பொலிவுறும்மதுரைமாநகர், 2. மறைந்தசங்கத்தை மகிழ்பெற அமைத்தல், 3 சத்தியத்தில் சிறந்தார் ஷான்காரெனலாம், 4 பர்மார்தலைநகரென்பதில் தானெடுத்துரைத்தல், 5 காண்பரன்ஸ்கண்டு கனவருத்த மெய்துதல், 6 புத்தகலாயத்தை புதிதாய்த் திறந்தனர், 7 குருநாதர் வருகையைக் குறிப்பாயுரைத்தல், 8 எத்தால்வாழலாம் ஒத்தால்வாழலாம், 9 நாட்டுப்புற நகரத்தார் காட்டிய நலம், 10 பூமியின் மாறுதலைப் புனிதமாய்க் கண்டோம், 11 சத்தியஉண்மை சாற்றிவிளக்குதல், 12 சங்கம் ஸ்தாபிக்கச் சம்மதம் பெறுதல், 13 மாந்தலே நகரின் மாவளம் கூறுவோம், 14 தேடாக்கோவில் பாழாய் முடிந்தது, 15 ஜீவரக்ஷகசாலை திறமையாய் நடத்துதல், 16 நாடிப்பிடித்தல் நன்நம்பிக்கையே, 17 முயற்சியால்முடியாது யாதேனுமுளதோ, 17a ஆலயச்செலவை அடக்கிச் செய்தல், 18 வேற்றுமைவிருக்ஷம் வேரோடி விட்டது, 19 குட்டித் தொழிலால் ஏற்படும் குணமின்மை, 20 மூன்றுவருட மேமென்திரச் ஜெயில்கூடம், 21 பணநெருக்கடி பசபச என்கிறது, 22 உலகானுபவ உண்மைகண்டு தனைவசிய சமூகமே எழுந்திரு, 23 இன்கம் டாக்சால் ஏற்படும் இடுக்கண், 24 காண்பதில் பெருமை கல்வியே எனலாம், 25 நிலத் தீர்வையா லேற்படும் நிகழ்ச்சி, 26 சிரத்தையுடன்கூடிய ஊக்கம், 27 திரேக அப்பியாசத்தைத் திறமையாய்க்

கைக்கொளல், 28 புகழ்ச்சிக்குரிய புத்திரன் உதித்தனன். என்ற பல விஷயங்களே. யான் ஒவ்வொன்றும் இன்னவாறு யெழுதவேணுமென த் திட்டம் ஏற்படுத்திக்கொண்டு யெழுதமுற்படவில்லை. சரித்திரம் யெழுதிப்பழக்கப்பட்டவனுமல்ல. எம்மனதில் தேச சம்பந்தமாய்க் கொண்டுள்ள யெண்ணங்களும் எழுதவேண்டியவைவயும் பலவாகும் ஒவ்வொன்றும் ஜாதீய அபிமானங்கொண்டுவெளியிடுவதே. யாரொருவர் புத்தகத்தைக் கையிலெடுத்துப் பார்க்க முற்படினும் நடுநிலையிலிருந்தே பார்த்தல்வேண்டும். அப்படிச்செய்தாலே நாம் அறிந்திருந பலவிஷயங்களையும்நன்குதெரிந்துக்கொள்ளலாம். நுனிப்புல் மேய்தல்போல் முதலிலும் நடுவிலும் கடைசியிலும் பார்ப்பதால் உள்ள விஷயத்தை சரியாகத் தெரிந்துக்கொள்ள முடியாது. தேசநலம் கருதியவரின்பேரில் எவ்வளவு குற்றம் ஏற்படுத்தினும் ஏற்படுத்தலாம். "குற்றம் களைந்து குணங்கொண்டு ஆராய்தல் கற்றறிந்தமாந்தர் கடன்" எனவும் "குற்றம்நாடி குணம்நாடி மிகைநாடி மிக்ககொளல்" யெனபதும் பெரியாரது ஆப்த வாக்கியங்கள் நம்மவர்கள் தற்காலத்துக்கேற்றவாறு வட்டித்தொழிலைக்குறைத்து ஆதியில் நாம் செய்துவந்த வர்த்தகமாகிய வியாபாரத்தைக் கைக்கொள்ளின் எவ்வளவோ நலமும் சாஸ்தியான வருவாயும், புகழும் ஏற்படும். அதைப்பற்றி விரிவாய்ச் சொல்லியுள்ளேன். சில வருடங்களுக்குமுன் நம் சகோதரர் காங்கிரஸ் பார்க்கச்சென்றவர்களில் இரண்டொருவர் வியாபாரிகளென்று பெயரைப் பதிவுசெய்து கொண்டனராம். கல்கத்தா, பம்பாய் முதலிய இடங்களில் வியாபாரிகளென்றாலே மதிப்பும், கௌரவமுமாகும். முழுதும் வட்டித்தொழிலை மாற்றிக்கொள்ள முடியாதெனினும் சிறுகச்சிறுக மாற்றிக்கொள்ளவேண்டியது அவசியமாகும்.

நாம் ஒவ்வொருவரும் இவ்வளவு முயற்சி யெடுத்துக்கொண்டு சிறிது நேரத்தை ஒதுக்கிவைத்தது எதற்கு? நாம் தெரிந்துக்கொள்ளாத விஷயங்களைத் தெரிந்துக்கொள்ளுவதற்கேயாகும் ஆனால் பலர் என்ன நினைக்கின்றனர்? B. N. C. A. சங்கமூலம் வெளியாகும் புஸ்தகங்களில் பலர் அறியக்கூடாத சில விஷயங்களை வெளியிடுகின்றோமெனவே உதாரணமாக நாம் பழக்கடைக்குச்செல்வோமானால் அங்கு பல கனிவர்க்கங்களும் வைத்திருக்கின்றனர். எவ

ரவர்களுக்கு எது எது வேண்டியதோ அதையே அவரவர்களும் வாங்கி வருவர். அவ்வாறாகிய கனி முழுதும் பயன்பெறுகிறதா? அல்ல அதில் எடுத்ததும் மேல்தோலும் உள்ளில் கொட்டையும் சக்கைகளும் தள்ளுபடியாகின்றன. முழுவதும் பயன்பெறும் கனி எப்படி உலகத்தில் உண்டாகவில்லையோ அப்படியே முழுவதும் பயன்பெறும் விஷயம் இருக்கமாட்டாது நம் சமூகத்தாரே முன்னேற்றமென்ற திருத்தமடையவேண்டுமென்ற வெண்ணம் ஒவ்வொருவருக்கும் உண்டெனினும் ஒரு விஷயத்தைக் குறிப்பிடும்போதும், கைக்கொள்ளவேண்டுமெனச் சொல்லும்போதும் வருத்தமேற்படுகின்றது. தாயானவள் பிள்ளைகட்கு மருந்து கொடுக்கும்போது மருந்து யெனத்தெரியாது சர்க்கரையினுள் வைத்தும் பாலுடன் கலந்தும் அளித்து அருந்தச்செய்து நோயை அகற்ற உதவியாயிருத்தல்போல, நல்ல விஷயங்களைக் கூறும்போதே அவற்றுடன் கலந்து நமக்குள் காணும் குற்றங்குறைகளையும் நம்மனோரின் முன்னேற்றத்தைக் கருதி சொல்லவேண்ட நேரிட்டுவிடுகின்றது. அதனால் நன்மை விளையுமேயன்றி ஒருக்காலும் தீமை விளையமாட்டாதென்று உறுதியாய் நம்புகிறோம்.

பிரயாணஞ்செய்த ஊர் 119. பாக்கியுள்ள ஊர் சுமார் 20 கடைகள் 785 கோவிலும 41 மடமும் அதில் மடமில்லாது 10 சமூக சேவைக்கு முற்பட்டதிலிருந்து எனக்குப்பலவிதத்தும் சிரமம் மிகுதியே நகரத்தார்களுக்குத் திருத்தொண்டுசெய்து அவர்கள் முன்னேற்றத்தைக் கண்டுகளிக்க அவாவுண்டாகிறதே தவிர நகரத்தார்களுக்கு விரோதமான எவ்வித வேலையாவது செய்தால் நலமடையலாமென்ற எண்ணம் உண்டாகவேயில்லை, அப்படியேயிருக்கும்படி நகரத்தார்கள் அனைவரும் ஆசீர்வாதஞ்செய்ய வேண்டியதுடன் சதா திருவருள்செயலைச் சிந்திக்கின்றேன்.